பக்கங்கள்: 09

# காலைக்கதிர்

Kalaikkathir

விடியல் 07 வள்ளுவர் ஆண்டு 2054 பங்குனி 09 ஞாயிற்றுக்கிழமை 26.03.2023 கதிர் 137

## இது ரகசியம் அல்ல!

ஆழம் அறியாமல் காலை விடாதே என்கிறது பழமொழி. அப்படியென்றால் ஆழம் அறிவதற்கு என்ன செய்வது? காலை விட்டுத்தான் பார்க்கவேண்டும். அனைத்துப் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தினர் நேற்று யாழ்ப்பாணத்தில் நடத்திய நிகழ்வை அப்படித்தான் பார்க்கவேண்டும். ஆழம் அறிவதற்காகக் காலை விட்டுப் பார்த்திருக்கிறார்கள்.

யாழ்ப்பாண நகரின் மத்தியில் யாழ். மத்திய கல்லூராரிக்கு அருகில் ரிம்மர் மண்டபத்தில் அவர்கள் ஒரு நிகழ்வை ஏற்பாடு செய்திருந்தார்கள். பயங்கரவாதத் தடைச் சட்டத்திற்கு எதிராக மக்கள் சக்தியைக் கட்டியெழுப்பும் நிகழ்வு என்கிற பெயரில் இந்த நிகழ்வு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

அனைத்துப் பல்கலைக்கழக மாணவர்கள் ஒன்றியத் தலைவர் வசந்த முதலிகே தலைமையில் தெற்கில் இருந்து பேருந்தில் வந்திருந்த 50 பேர்

2

# பொறுப்புக்கூறலை உறுதிசெய்ய ஆட்சி தீவிரம் காட்டவேண்டும்

## ஐ.நா. மீளாய்வுக் குழு வலியுறுத்து

கொழும்பு, மார்ச் 26

இலங்கையில் நிகழ்ந்த மனித உரிமை மீறல்கள் தொடர்பில் பொறுப்புக்கூறலை உறுதிசெய்வதற்கான முயற்சிகளை இந்த ஆட்சி தீவிரப்படுத்தவேண்டும் என்று ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் மீளாய்வுக்குழு வலியுறுத்தியுள்ளது.

ஐக்கிய நாடுகள் சபையின் கீழ் இயங்கும் பொது மற்றும் அரசியல் உரிமைகளுக்கான சர்வதேச சமவாயம் தொடர்பான மனித உரிமைகள் மீளாய்வுக்குழுவின் இலங்கை தொடர்பான 6 ஆவது மீளாய்வுக்கூட்டம் மார்ச் 7ஆம், 8ஆம் திகதிகளில் நடைபெற்றது.

இம்மீளாய்வின்போது இலங்கை தொடர்பில் கண்டறியப்பட்ட விடயங்கள் மற்றும் எதிர்வருங் காலங்களில் இலங்கையால் நடைமுறைப்படுத்தப்படவேண்டிய பரிந்துரைகள் என்பவற்றை உள்ளடக்கிய 12 பக்க இறுதி அறிக்கை மனித உரிமைகள் மீளாய்வுக்குழுவினால் வெளியிடப்பட்டுள்ளது.

அந்த அறிக்கையில், இலங்கை ஆட்சியாளர்களால் 2016ஆம் ஆண்டு 14 ஆம் இலக்க காணாமல்போனோர் பற்றிய அலுவலகச்சட்டம், 201 ஆம் ஆண்டு 16 ஆம் இலக்க உள்ளூராட்சிமன்றத்தேர்தல்கள் சட்டம், 2017 ஆம் ஆண்டு 27 ஆம் இலக்க குற்றச்செயலால் பாதிக்கப்பட்டோர் மற்றும் சாட்சியாளர்களைப் பாதுகாப்பதற்கான சட்டம், 2018 ஆம் ஆண்டு 34 ஆம் இலக்க இழப்பீட்டுக்கான அலுவலகச் சட்டம், 2018 ஆம் ஆண்டு 5 ஆம் இலக்க வலிந்து காணாமலாக்கப்படல்களிலிருந்து அனைவரையும் பாதுகாப்பதற்கான சர்வதேச சமவாயம், 2022 ஆம் ஆண்டு 11 ஆம் இலக்க காணி அபிவிருத்திச்சட்டம் ஆகிய சட்டங்கள் இயற்றப்பட்டமை வரவேற்கத்தக்க விடயமாகும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

2

## தேசிய பாடசாலை தரமுயர்வு இனி இப்போதைக்கு கிடையாது



நான் அமைச்சராக இருக்கும் காலப்பகுதியில் எந்தவொரு பாடசாலையையும் தேசியப் பாடசாலையாகத் தரமுயர்த்தப் போவதில்லை என்று கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்த தெரிவித்தார்.

கொழும்பில் நடைபெற்ற நிகழ்வொன்றில் பங்கேற்று உரையாற்றும்

2

## ரணிலுக்கு வாய்ப்பு வழங்க வேண்டுமாம்



ஓரிரு வாரங்களில் ஐக்கிய மக்கள் சக்தியின் உறுப்பினர்கள் சிலர் இந்த ஆட்சியில்இணையவுள்ளனர்என்று சுற்றுலாத்துறை அமைச்சர் ஹரின் பெர்னாண்டோ தெரிவித்தார்.

2

## தனிநபர் பேச்சு சுதந்திரத்துக்கு பெரும் நெருக்கடி

தற்போது தனிநபருக்கான பேச்சு சுதந்திரத்துக்குப் பெரும் நெருக்கடி ஏற்பட்டுள்ளதாக உயர் நீதிமன்ற நீதியரசர் ஜயந்த ஜயசூரிய தெரிவித்தார்.

பண்டாரநாயக்க சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் இலங்கைச் சட்டத்தரணிகள் சங்கத்தின் புதிய நிர்வாகத்தினைப் பொறுப்பேற்கும் உத்தியோகபூர்வமான நிகழ்வில் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:

நீதிமன்றக் கட்டமைப்பு நிர்வாகத்தில் சமூகத்தின் கடமைகள் மற்றும் பொறுப்புக்களை நிறைவேற்றுவது முக்கிய விடயமாகின்றது. தற்போது தனிநபருக்கான பேச்சு சுதந்திரம் தொடர் பில் பெரும் நெருக்கடிகள் நிலவுகின்றன. இத்தகையதொரு சூழலில்தான் புதிய தலைவர் சட்டத்தரணிகள் சங்கத்திற்கு நியமிக்கப்பட்டுள்ளார்.

இன்று உலகின் அத்தனை சவால்களையும் எதிர்கொள்ளக் கூடிய சட்டத்தரணிகளே அவசியமாகின்றனர். அத்துடன் நேர்மையாக, வெளிப்படையாகச் செயற்படும் சட்டத்தரணிகளும் அவசியமாகின்றனர். எமது நாட்டைப் பொறுத்தவரையில் பூகோள ரீதியாக முன்னோக்கிப் பயணிக்க வல்ல சட்டத்தரணிகளும் அவசியமாகின்றனர் - என்றார்.

## கடும் தண்டனையை அனுபவிப்பார் ரணில்

### சஜித் அணி கூறுகின்றது



உள்ளூராட்சி சபைத் தேர்தல்தொடர்பில்நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மீறிச் செயற்படுவதால்அவர்ஜனாதிபதிப் பதவியை இழந்ததும் கடும் தண்டனையை எதிர்கொள்ள வேண்டிவரும்.

இவ்வாறு ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் ஹர்ன ராஜகருணா தெரிவித்தார். இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

தேர்தலுக்காக - அதன் மூலம் ஜனநாயகத்தைப் பாதுகாப்பதற்காக நாம் போராடி வருகின்றோம். உயர் நீதிமன்றம் சென்று சாதகமானதீர்ப்புஒன்றையும் பெற்றுள்ளோம்.

நீதிமன்றத்

2

## மக்கள் என் பக்கம் உள்ளனர் சர்வதேசமும் எனக்கு ஆதரவு

### தொழிற்சங்கப் போராட்டம் மூலம் எதனையும் சாதிக்கமுடியாது என்று ரணில் சுட்டிக்காட்டு

கொழும்பு, மார்ச் 26

நாட்டு மக்கள் தற்போது என் பக்கமே நிற்கின்றார்கள். சர்வதேச சமூகமும் எனக்கு ஆதரவு வழங்குகின்றது. அதனூடாகவே சர்வதேச நாணய நிதியத்தின் கடனுக்கு அங்கீகாரம் கிடைத்தது. இந்நிலையில், தொழிற்சங்கங்களின் போராட்டங்கள் - பணிப்புறக்கணிப்புக்கள் மூலம் எதனையும் இங்கு சாதிக்க முடியாது என்பதைச் சம்பந்தப்பட்ட தரப்பினர் கவனத்தில்கொள்ள வேண்டும்.

இவ்வாறு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

சிங்கள ஊடகம் ஒன்றுக்கு வழங்கிய செவ்வியின் போதே அவர் இதனைக் கூறியுள்ளார்.

வரி விதிப்பு தவிர்க்க முடியாத ஒன்று. சர்வதேசத் திடமிருந்து வாங்கிய - வாங்குகின்ற கடனை அடைக்க வரி விதிப்பு மிகவும் அவசியம். அரசுக்கு மிரட்டல் விடுக்கும் தொழிற்சங்கத்தினர் இது குறித்து அறிந்திருப்பார்கள் - என்றும் ஜனாதிபதி குறிப்பிட்டார்.

எதிர்க்கட்சிகளுக்குள் பிளவுகள் இருப்பதுபோல் தொழிற்சங்கங்களுக்குள்ளும் பிளவுகள் உள்ளன. இவற்றில் சுயலாப சிந்தனை கொண்டவர்கள் போராட்டங்களை நடத்துகின்றார்கள். ஆனால, எதனையும் சாதிக்க முடியாது என்பதைச் சம்பந்தப்பட்ட தரப்பினர் கவனத்தில்கொள்ள வேண்டும் - என்றும் ஜனாதிபதி மேலும் கூறினார்.

## உள்ளூராட்சிமன்ற எதிர்காலம் குறித்து ஆராய குழு நியமனம்

### பிரதமர் தலைமையில் ரணில் நியமித்தார்

உள்ளூராட்சி மன்றங்களின் ஆயட்காலம் நிறைவுக்கு வந்துள்ள நிலையில் அவற்றின் எதிர்கால நடவடிக்கைகள் குறித்து ஆராய்வதற்காக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவினால் குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளது.

பிரதமர் தினேஷ் குணவர்த்தன தலைமையில் இந்தக் குழு

2

## மாகாண சபைகளை ஆராயவும் ஐ.தே.க. தலைமையில் குழு

### ஜனாதிபதி நியமித்தார்

ஆளுநர்களின்கட்டுப்பாட்டில் உள்ள மாகாண சபைகளின்விவகாரங்களைஆராய்வதற்காக ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்வஜிரஅபேவர்தன தலைமையில்குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளது.

மாகாண சபைகளுக்கான தேர்தல்

2

## இலங்கைக் கடலில் மீன்பிடிக்க இந்திய மீனவருக்கு அனுமதி வழங்கப்பட்டதா இல்லையா?

### கேட்கிறார் இலங்கை மீனவ சம்மேளன அமைப்பாளர்



வடக்கு கடலில் இந்திய மீனவர்களுக்கு மீன்பிடிப்பதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளதா இல்லையா என்பதை உறுதிப்படுத்த வேண்டும் என்று என்று அகில இலங்கை பொது மீனவ சம்மேளனத்தின் தேசிய அமைப்பாளர் ரத்ன கமகே தெரிவித்தார்.

கொழும்பில் சனிக்கிழமை செய்தியாளர்களைச் சந்தித்தபோதுஅவர்இதனைத் தெரிவித்தார். அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:

வடபகுதியில்உள்ளகடற்பரப்பில் இந்திய மீனவர்கள் வாரத்தில்

2

## நீதித்துறை சுயாதீனம் அச்சறுத்தப்பட்டால் அச்சமின்றி அதற்கெதிராக நடவடிக்கை

### சட்டத்தரணிகள் சங்க புதிய தலைவர் அறிவிப்பு

நீதித்துறையின் சுயாதீனத்துக்கு அச்சுறுத்தல் விடுக்கப்பட்டால் அச்சமின்றி அதற்கெதிராக நடவடிக்கை எடுக்கப்படுமென இலங்கைச் சட்டத்தரணிகள் சங்கத்தின் புதிய தலைவர் சிரேஷ்ட சட்டத்தரணி கௌசல்ய நவரட்ன தெரிவித்தார்.

இலங்கை சட்டத்தரணிகள் சங்கத்தின் 2023 - 2024ஆம் ஆண்டுக்கான நிர்வாகத்தினை உத்தியோகபூர்வமாக பொறுப்பேற்கும் நிகழ்வுநேற்றுபிரதமநீதியரசர் ஜயந்த ஜயசூரிய தலைமையில் பண்டாரநாயக்க சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்றது.

இதில் உத்தியோக பூர்வமாக தலைமைப்பதவியை ஏற்றுக்கொண்டதன் பின்னர் உரையாற்றுகையிலேயே நவரட்ன இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

எமது நாட்டின் சட்டத்தரணிகள் இலங்கைக்கு வெளியிலும் துறைசார்ந்து முன்னோக்கிச் செல்வதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படவேண்டியுள்ளது.

நாம் முற்போக்கான நடவடிக்கைகயை முன்னெடுக்க வேண்டும். நாடாளுமன்றம் எமது முற்போக்கான

2

## அரசு பக்கம் சாய்ந்த மேர்வின்



ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க சிறப்பாகச் செயற்படுவார்என்றுநம்புகின்றேன். நானும் தற்போது அரசு பக்கம்தான் உள்ளேன்.

இவ்வாறு முன்னாள் அமைச்சர் மேர்வின் சில்வா தெரிவித்தார்.

2

# வரலாற்றில் முதல் தடவையாக அமைச்சரவையில் கூட்டமைப்பு



### தான் ஜனாதிபதியாகி இருந்தால் நடந்திருக்ககும் என்கிறார் டலஸ்

நான் ஜனாதிபதியாகி இருந்தால் என்னோடு நிறைவேற்று அதிகாரமிக்க ஜனாதிபதி முறைமை ஒழிந்திருக்கும். வரலாற்றில் முதல் தடவையாக தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்களும் அமைச்சரவையில் இருப்பதற்குவாய்ப்புஏற்பட்டிருக்கும்.

இவ்வாறு சுதந்திர மக்கள் சபையின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான

2

## ஜனாதிபதிக்கு எதிராக குற்றவியல் பிரேரணை

### எச்சரிக்கின்றது டலஸ் அணி



தேர்தலைஒத்திப்போடல் என்பது முழுமையான அரசமைப்பு மீறல். இந்தக் காரணத்தை அடிப்படையாக வைத்தே ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு எதிராகக் குற்றவியல்பிரேரணையைக் கொண்டுவர முடியும்.

இவ்வாறு சுதந்திர மக்கள் சபையின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான டலஸ் அழகப்பெரும தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

உள்ளூராட்சி சபைத் தேர்தலை

2

## தவறு

சர்வதேச நாணயநிதியின் நீடிக்கப்பட்ட கடன் வசதி கிடைத்தவுடன் அனைத்துப் பிரச்சினைகளுக்கும் தீர்வு ஏற்படும் என்று கருத்து வெளியிடுவது முற்றிலும் தவறானது என்று சுதந்திர மக்கள் சபையின் உறுப்பினர் பேராசிரியர் ஜீஎல்.பீரிஸ் தெரிவித்துள்ளார்.

அனுராதபுரத்தில் நேற்று செய்தியாளர்களிடம் பேசியபோது அவர் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

இலங்கையின் பொருளாதாரநெருக்கடியில்இருந்து மீண்டு

2

## இனி இது .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) வரையிலானோர் இந்த நிகழ்வில் கலந்துகொண்டிருந்தனர். இந்த நிகழ்வில் கலந்துகொள்ளுமாறு யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர்களுக்கு வசந்த முதலிகே தனிப்பட்ட அழைப்புக்களை விடுத்திருந்தார். ஆனால், அவர்கள் அதனை நிராகரித்துவிட்டனர். எவரும் நிகழ்வில் பங்கேற்கவில்லை.

அண்மையில் வசந்த முதலிகேயும் அவரது நண்பர்களும் யாழ்ப்பாணம் வந்திருந்தனர். யாழ்ப்பாணப் பல்கலைக்கழ மாணவர்களையும் சந்தித்துக் கலந்துரையாடினர். அப்போதும் அவர்களின் நோக்கம் தெற்கில் தாம் முன்னெடுத்துவரும் போராட்டத்தில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் உள்ளிட்ட வடக்குப் பல்கலைக்கழக மாணவர்களையும் உள்ளீர்த்துக் கொள்வதுதான். அதுதொடர்பீல்பேசி, மாணவர்களை இணங்கச் செய்யலாம் என்கிற நோக்கத்தோடு அவர்கள் வந்திருந்தார்கள்.

முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவைத் துண்டைக் காணோம் துணியைக் காணோம் என்று ஓடவிட்ட மக்கள் புரட்சியில் வசந்த முதலிகேவுக்கும் கணிசமான பங்குண்டு. போராட்டங்களைக் கட்டுப்படுத்த அப்போதைய ஆட்சியாளரான கோட்டாபய எடுத்த நடவடிக்கைகளை சமயோசிதமாக எதிர்கொண்டு முறியடித்து இறுதிநாள் போராட்டத்தில் தனது மாணவப் படையினருடன் ஜனாதிபதி மாளிகைக்குள் நுழைந்ததுவரை அன்றைய ஆட்சியின் அடிமடியிலேயே கைவிட்டு ஆட்டியவர் வசந்த முதலிகே.

ரணில் விக்கிரமசிங்க அதிகாரத்திற்கு வந்ததும் முதலில் செய்த வேலை வசந்த முதலிகேவைப் பிடித்துப் பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் சிறையில் அடைத்து வைத்தததுதான். நீண்ட நாள்களாகச் சிறையில் அடைக்கப்பட்டிருந்த அவர் அண்மையில்தான் விடுவிக்கப்பட்டார். பிணையில் வந்த பின்னரும் பிக்கு மாணவர்களுடன் சேர்ந்து கல்வி அமைச்சின் உள்ளே போராட்டம் நடத்தி அதற்காக மீண்டும் கைதாகீப்பிணையில்விடுவிக்கப்பட்டவர்.

சொல்லப் போனால் தெற்கில் அவர் ஒரு புரட்சிக்கதாநாயகன். யாழ்ப்பாணத்தில் பிறந்து, பெரதெனியா பல்கலைக்கழகத்தின் பொறியியல் பீடத்திற்குத் தெரிவாகி, அங்கு மாணவர் தலைவராகிப் பின்னர் தனது பட்டப்படிப்பையே முடிக்காமல், சிங்களப் பெண் மருத்துவரை மணந்துகொண்டு ஆஸ்திரேலியாவின் குடியேற்றவாசியாகி, பின்னர் இலங்கைக்குத் திரும்பி வந்து, அரசியலில் ஈடுபட்டு அதற்காகச் சிறைக்குச் சென்று, தற்போது இலங்கைக் குடியுரிமைபெற்று அரசியலில் முழுமையாக இறங்கிவிட்ட குமார் குணரட்ணம் என்கிற பிரேமகுமார் குரட்ணத்தின் முன்னிலை சோசலிஸக் கட்சியின் பின்புலத்தில் இயங்குபவர் என்று பரவலாக நம்பப்படுபவர் வசந்த முதலிகே.

அந்த அறிமுகத்துடன் யாழ்ப்பாணம்வந்திருந்தஅவர் இங்குள்ள பல்கலைக்கழக மாணவர்களிடம் நோட்டம் பார்த்தார். ஆனால் "சிக்குமா சிறுத்தை" என்கிற கணக்கில், முதலில் தமிழ் மக்களின் பிரச்சினைகள் தொடர்பில் உங்கள் நிலைப்பாடு என்ன ஏது என்று தெரிவியுங்கள் பின்னர் சேர்ந்து இயங்குவதைப் பற்றிப் பார்க்கலாம் என்றுகூறி திருப்பி அனுப்பிவிட்டார்கள் யாழ். பல்கலைக்கழக மாணவர்கள். அதனால் நேற்றைய நிகழ்வு தொடர்பில் அவர்களுடனும் எந்தக் கலந்துரையாடலும் நடத்தப்படவில்லை. அவர்களுக்கும் திடீரென ஒரு அழைப்பிதல் போன்ற ஒரு வடிவமைப்பு அலைபேசிகள் (மொபைல்ஸ்) ஊடாக அனுப்பப்பட்டன. விரும்பினால் கலந்துகொள்ளுங்கள் என்று தெரிவிக்கப்பட்டது.

தங்களோடு எதுவும் கலந்துபேசாது திடீரெனத் இந்த நிகழ்வு ஏற்பாடு செய்யப்படுவது தொடர்பில் சுதாகரித்துக்கொண்ட யாழ். பல்கலைக்கழக மாணவர்கள் அதில் கலந்துகொள்வதில்லை என்று முடிவு செய்தனர். அதற்கிடையில் இந்தத் தகவல் அரச புலனாய்வாளர்கள் சகலருக்கும் காட்டுத் தீயாய் பரவியது. அவர்களும் அது என்ன நிகழ்வு, வசந்த முதலிகே குழு இங்கே வந்து என்ன செய்யப்போகிறார்கள் என்று தகவல் அறிவதற்கு ஆலாய்ப் பறந்து திரிந்தார்கள்.

ஏனெனில் நிகழ்வு குறித்த அழைப்பிதழ் போன்ற வடிவமைப்பில், பயங்கரவாதச் சட்டதை உடனடியாக நீக்கவேண்டும், அனைத்து அடக்குமுறைச் சட்டங்களையும் நீக்கு, அனைத்து அரசியல் கைதிகளையும் விடுதலை செய், மார்ச் 25 யாழ்ப்பாணம் நகரில் என்று மட்டுமே தெரிவிக்கப்பட்டிருந்தது. புலனாய்வாளர்கள் அந்த நிகழ்வு ரிம்மர் மண்டபத்தில் நடக்கப் போகிறது ஏன்று ஒருவழியாகக் கண்டுபிடித்துவிட்டார்கள். ஆனால் என்ன நடக்கப்போகிறது என்று அவர்களுக்குத் தெரியவில்லை-அறியமுடியவில்லை. பம்பரமாய்ச் சுழன்று திரிந்தார்கள். ஆனால் எந்தத் தகவலும் கசியவில்லை. அவர்கள் ஏதாவது ஆர்ப்பாட்டத்தில் ஈடுபடுவார் களா, ஏதாவது கலகம் செய்துவிடுவார்களா, ஊடகங்கள் அவர்களுக்கு ஆதரவாகச் செய்தி போட்டுவிடுமா என்று ஆலாயப் பறந்து திரிந்தார்கள். ஆனால், உருப்படியான எந்த விடயத்தையும் தெரிந்துகொள்ள முடியவில்லை. நிகழ்வு ஒன்று நடக்கப் போகிறது, அதுவும் ரிம்மர் மண்டபத்தில் நடக்கப் போகிறது என்பதற்கு அப்பால் எந்தத் தகவலும் இல்லை. தலையைப்பிய்த்துக்கொண்ட புலனாய்வுத்துறையினர் வசந்த முதலிகேயை எதிர்கொள்ள என்ன செய்திருந்தார்கள் என்பது நேற்றுக் காலை தெரியவந்தது.

மறுநாள் காலையில், அதாவது நேற்றுக்காலையில் திடீரென யாழ்ப்பாணத்தில் வந்திறங்கிய சில டசின் கணக்கானவர்கள், கைகளில் பதாகைகளுடன் ரிம்மர் மண்டபத்திற்கு எதிராகத் திரண்டார்கள். அவர் களின் கைகளில் இருந்த அட்டைகளில் யாழ்ப்பாணத்திற்கு தொழிற்சங்க நடவடிக்கை வேண்டாம் என்றும் எங்கள் பிள்ளைகளின் கல்வியை சுதந்திரமாகக் கற்க இடம்கொடு என்கிற பதாகைகளைத் தாங்கியிருந்தனர். ஒற்றுமையாகவும் அமைதியாகவும் இருக்கின்ற யாழ்ப்பாணத்தைக் குழப்பவேண்டாம் என்ற முழக்கத்துடன் இந்த ஆரப்பாட்டம் முன்னெடுக்கப்பட்டது.

போராட்டத்தின் முன்னணியில் யார் வந்தார் என்றால், வலிமேற்கு பிரதேசசபையின் முன்னாள் தவிசாளர் திரிலோகநாதன். ஒரு காலத்தில் ஈபிடிபியில் கிட்டத்தட்ட ஒரு தளபதி. டபிள் பிஸ்ரல் கொடுக்கப்பட்டிருந்தவர். கொடி, குடை, அலவட்டம், பரிவாரங்கள் புடைசூழ வாகனத்தில் புழுதி கிளப்பித் திரிந்தவர். திடீரெனக் காதல் வயப்பட்டு, சிறு பெண்ணையும் இழுத்துக் கொண்டு தலைமறைவாகிப் போனார். அதன் பின்னர் பல ஆண்டுகள் கழித்து பல் லுப் பிடுங்கப்பட்ட பாம்பாக யாழ்ப்பாணத்திற்குத் திரும்ப வந்தார். ஆளை இப்போதெல்லாம் சுழிபுரம் சந்தியில் அடிக்கடி காணலாம் என்கிறார்கள். அவர்தான் நேற்றைய போராட்டத்தின் முன்னணி கதாநாயகன்.

கோட்டாவுக்கே குடைச்சல் கொடுத்த வசந்த முதலிகேயை எதிர்கொள்ள யாரைத் தேர்ந்தெடுத்திருக்கிறார்கள் பாருங்கள். காதலுக்காக தன் கொடி, குடை, பரிவாரம் எல்லாத்தையும் இழந்த "மைனர் குஞ்சு"வை. உருப்பட்ட மாதிரித்தான் போங்கள்.

- இடிமின்னல் -

## பொறுப்புக் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) 2016 ஆம் ஆண்டு வலிந்துகாணாமலாக்கப்படல்களிலிருந்து அனைவரையும் பாதுகாப்பதற்கான சர்வதேச சமவாயம் மற்றும் விசேட தேவையுடையோரின் உரிமைகள் தொடர்பான பிரகடனம் ஆகியவற்றிலும், கடந்த 2017ஆம் ஆண்டு சித்திரவதைகள் மற்றும் ஏனைய மிகக்கொடூரமானதும் மனிதத்தன்மையற்றதுமான தண்டனைகளுக்கு எதிரான பிரகடனத்திலும் இலங்கை இணைந்துகொண்டமையை வரவேற்கத்தக்கது என்றுள்ளது.

அத்துடன், இலங்கையில் தொடர்பானமீளாய்வின்போது அடையாளங்காணப்பட்ட கரிசனைக்குரிய விடயங்கள் மற்றும் அவற்றை நிவர்த்தி செய்வதற்கு அரசாங்கத்தினால் நிறைவேற்றப்படவேண்டிய பரிந்துரைகள் தொடர்பிலும் குறித்த அறிக்கையில் வெளிப்படுத்தப்பட்டுள்ளது.

அதனடிப்படையில், இலங்கை ஆட்சியாளர்களால் முன்னெடுக்கப்பட்டுவரும் அரசமைப்பு மறுசீரமைப்புச் செயன்முறையில் தொடரும் தாமதம் மற்றும் அதன் தற்போதைய நிலவரம் குறித்து போதியளவு தகவல்கள் இல்லாமை என்பன கரிசனையைத் தோற்றுவித்துள்ளன.

எனவே ஆட்சியாளர்கள் அதன் அரசமைப்பு மறுசீரமைப்புச் செயன்முறையை முழுமையாகப் பூர்த்தி செய்வதுடன், அதனூடாக அதிகாரங்கள் பகிர்ந்தளிக்கப்படுவதும் நிறைவேற்றதிகாரத்துக்கும் ஏனைய கண்காணிப்புக் கட்டமைப்புக்களுக்கும் இடையிலான நேர்த்தியான கடப்பாடு பேணப்படுவதும் உறுதிப்படுத்தப்படவேண்டும்.

மனித உரிமைகள் பாதுகாக்கப்படுவதுடன் எதிர்காலத்திருத்தங்கள் ஊடாக இம் மறுசீரமைப்புக்கள் தன்னிச்சையான முறையில் நீக்கப்படாமலிருப்பதையும் உறுதிப்படுத்தவேண்டும் - என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

## தேசிய ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) போதே அவர் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவவித்ததாவது:

நாட்டில் தற்போது 499 தேசிய பாடசாலைகள் உள்ளன. அதில் கல்வி கற்பிக்கும் ஆசியர்கள் 35ஆயிரம் பேர் உள்ளனர். அவ்வாறு தேசிய பாடசாலையில் கடமையாற்றும் 14500 பேர் இடமாற்றம் கோரியுள்ளனர். அவர்களுக்கு இடமாற்றம் வழங்கியவுடன் 20 முதல் 25 பேர் வரையிலானவர்கள் அதற்கு எதிர்ப்புத் தெரிவித்து ஜனாதிபதியை நாடியுள்ளனர். அதன் பின்னர் ஜனாதிபதியை சந்தித்து நான் அப்பிரச்சினைக்கு தீர்வினை எட்டியுள்ளேன்.

அதேநேரம் 499 தேசிய பாடசாலைகளில் 35 ஆயிரம் ஆசிரியர்கள் பணியாற்றி சிறப்பான வெளியீட்டைப்பெற முடியாது விட்டால் ஆயிரம் பாடசாலைகளை தேசிய பாடசாலைகளாகத் தரமுயர்த்தியிருந்தால் நிலைமைகள் எவ்வாறிருக்கும். ஒரு இலட்சத்தை கடந்து ஆசிரியர்கள் கற்பித்தல்பணிக்காகதேவைப்படுவார்கள்.

அப்படியிருக்க, தற்போது அபிவிருத்தி உத்தியோகத்தர்களாக உள்ளீர்க்கப்பட்ட 22 ஆயிரம் பேர் எவ்விதமான பயிற்சிகளும் இல்லாது பாடசாலைகளில் ஆசிரியர் பணிகளுக்காக இணைத்துக்கொள்ளப்பட்டுள்ளனர். அவர்கள் பட்டதாரிகளாக இருக்கின்ற அதேநேரம் தரம் ஒன்றில் உள்ள பிள்ளைக்கு கூட கற்பித்தல் செயற்பாட்டை முன்னெடுக்க முடியாதவர்களாக உள்ளனர்.

ஆசிரியர்களுக்கான பயிற்சிக் கலாசாலையில் கற்பித்தலுக்கான உளவளம் உட்பட 37 விடயங்கள் கற்பிக்கப்படுகின்றன. அவ்விதமான பயிற்சி இல்லாதவர்களால் மாணவர்களின் மனோநிலைக்கு கீழிறங்கி கற்பித்தல் செயற்பாட்டை வழங்க முடியுமா? இதற்கு யார் பொறுப்புக் கூறுவது.

அதேநேரம், சீனா இம்முறை சீருடை அளிக்காது விட்டிருந்தால் எமது உடைகள்தான் இறுதியில் கழன்றிருக்கும் - என்றார்.

## ரணிலுக்கு .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) கண்டியில் நேற்று இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்துகொண்டதன் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து வெளியிடுகையில் இதனைத் தெரிவித்த அவர், மேலும் தெரிவித்ததாவது:

நாணய நிதியத்தின் ஒத்துழைப்பு கிடைக்கப் பெற்றுள்ள போதிலும், மக்களுக்கு பரந்தளவில் சலுகைகளை வழங்குவது சிரமமானதாகும். எவ்வாறிருப்பினும் எம்மால் விரைவில் நாட்டைக் கட்டியெழுப்ப முடியும். சர்வதேச நாணய நிதியத்திடமிருந்து கடனுதவி கிடைக்கப்பெற்றுள்ளமைக்கு இந்தியா மகிழ்ச்சியை வெளியிட்டுள்ளது.

இலங்கை தொடர்பில் எதிர்க்கட்சியிலுள்ளவர்களைத் தவிர வெளிநாட்டவர்கள் உட்பட ஏனையவர்களுக்கு பொறுப்புணர்வு காணப்படுகிறது. நாடு மீண்டும் வீழ்ச்சியடைவதை அவர்கள் விரும்பவில்லை. இந்நாட்டில் கடன் பெறாத எவரேனும் உள்ளனரா? அவ்வாறிருக்கையில் தற்போது சர்வதேச நாணய நிதியத்தின் கடனுதவியால் நாடு மீண்டும் வீழ்ச்சியடையும் எனக் கூறுவது அடிப்படையற்றது.

எதிர்க்கட்சிகளுக்கு இன்னும் தாமதமாகவில்லை. எனவே இந்த ஆட்சியுடன் இணையுமாறு அவர்களுக்கு அழைப்பு விடுக்கின்றோம்.

நட்டத்தில் இயங்கும் எந்தவொரு நிறுவனத்தையும் பொறுப்பேற்பதற்கு எவரும் முன்வருவதில்லை. அத்தோடு அரசு வர்த்தகத்தில் ஈடுபட வேண்டும் என்று எங்கும் கூறப்படவில்லை. ஆட்சியாளர்களின் பொறுப்பு மக்களுக்கான சேவைகளை வழங்குவதாகும்.

உள்ளூராட்சி மன்றத் தேர்தலின் ஊடாக நாட்டை மாற்ற முடியாதல்லவா? சர்வதேச நாணய நிதியத்தின் வேலைத்திட்டங்களை நிறைவு செய்து, நாடு சற்று கட்டியெழுப்பப்பட்டதன் பின்னர் தேர்தலை நடத்தலாம். உள்ளூராட்சிமன்றத் தேர்தல் மாத்திரமல்ல. ஜனாதிபதித் தேர்தலையோ அல்லது நாடாளுமன்றத்தேர்தலையோ நடத்தி எவரும் நாட்டை ஆட்சி செய்யலாம்.

அரசியலை முன்னிலைப்படுத்தியமையின் காரணமாக இதுவரை காலமும் நாம் வீழ்ச்சியடைந்து கொண்டிருந்தோம். அநுரகுமார திஸாநாயக்கவோ, சஜித் பிரேமதாசவோ சவாலை ஏற்கவில்லை. எனவே சவாலை ஏற்றுக் கொண்ட ஜனாதிபதி ரணிலுக்கு நாட்டைக் கட்டியெழுப்புவதற்கான சந்தர்ப்பத்தை வழங்குமாறு கேட்டுக் கொள்கின்றோம் - என்றார்.

## கடும் தண்டனை..

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) தீர்ப்பை மீறுகின்றவர்கள் தண்டனையை அனுபவிக்க வேண்டிவரும். ரணில் விக்கிரமசிங்கவும் தண்டனையை அனுபவிப்பார்.

அவர் ஜனாதிபதிப் பதவியில் இருக்கும் வரை தப்பித்துக் கொள்ளலாம். பதவியை இழந்ததும் அவர் நீதிமன்றம் செல்ல வேண்டிவரும்.

மைத்திரிபால சிறிசேனவுக்கு நடந்தது தெரியும்தானே. உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதல் தொடர்பில் அவருக்கு எதிராக நீதிமன்றம் அபராதம் விதித்துள்ளது. அப்படித்தான் ரணிலும் கடும் தண்டனையை அனுபவிப்பார்.

உள்ளூராட்சி சபைத் தேர்தல் முடிவு என்னவாக இருக்கும் என்று அரசுக்குத் தெரியும். அதனால்தான் தேர்தலை நடத்துவதற்கு அஞ்சுகின்றது அரசு.

தேர்தலை நடத்துவதற்குத் தேர்தல் இல்லை என்கிறார் ஜனாதிபதி ரணில். ஜனநாயகத்தை இப்படி மீற முடியாது. தேர்தலை நடத்தினால்தான் வெளிநாட்டு முதலீட்டாளர்கள் நாட்டுக்கு வருவார்கள். ஜனநாயகம் உள்ளது என்ற நம்பிக்கை அவர்களுக்கு ஏற்படும்.

பொருளாதார வளர்ச்சிக்குத் தேர்தல் மிகவும் அவசியம். மஹிந்தவின் ஆட்சியில் ஜனநாயகம் மீறப்படுகின்றது என்று கூறி ஜி.எஸ்.பி. பிளஸ் இல்லாமல் போனது. பொருளாதார வளர்ச்சி என்பது ஜனநாயகத்தைப் பாதுகாப்பதில்தான் தங்கியுள்ளது என்பதைப் புரிந்து கொள்ளவேண்டும். ரணிலின் ஆட்சியிலும் அது மீண்டும் இல்லாமல் போவதற்கு வாய்ப்புண்டு - என்றார்.

## உள்ளூராட்சி ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) நியமிக்கப்பட்டுள்ளது. இந்தக் குழுவில், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி இராஜாங்க அமைச்சர் ஜனக வக்கம்புர, நிதி இராஜாங்க அமைச்சர ரஞ்சித் சியம்பலாப்பிட்டிய, ஒன்பது மாகாணங்களின் ஆளுநர்கள், மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக்களின் தலைவர்கள் ஆகியோர் அங்கத்துவத்தினைக் கொண்டுள்ளனர்.

"உள்ளூராட்சிமன்றங்கள் ஊடாக, மக்களுக்காக முன்னெடுக்கப்படவேண்டிய அனைத்துப் பணிகளையும் எவ்வித இடையூறுமின்றி தொடர்ச்சியாக முன்னெடுப்பதற்குத் தேவையான வழிகாட்டுதல்கள் இந்தக் குழுவின் மூலம் வழங்கப்படும்.

மேலதிக நடவடிக்கைகளுக்காக எதிர்வரும் 3ஆம் திகதி ஆளுநர்கள் மற்றும் பிரதேச செயலகத் தலைவர்களுடன் கலந்துரையாடல் இடம்பெறவுள்ளது. அத்துடன், மக்களுக்கான சேவைகள் குறித்து சுற்றறிக்கை ஒன்றும் தயாரிக்கப்படுகிறது" என்றார் இது தொடர்பில் கருத்து வெளியிட்ட மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி இராஜாங்க அமைச்சர் ஜனக வக்கம்புர,

## மாகாண சபை....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) நடத்தப்படாது நான்கு ஆண்டுகள் கடந்துள்ளது. அத்துடன், தற்போது மாகாண சபைகளுக்கான தேர்தலை பழைய முறையில் நடத்துவதாக இருந்தால் நாடாளுமன்றத்தில் சட்டமொன்றையும் நிறைவேண்டியுள்ளது.

மாகாண சபைகள் சட்டத்தைத் திருத்தி பழைய தேர்தல் முறையின் கீழ் அதனை நடத்துவதற்காக தனிநபர் பிரேரணை ஒன்றை ஏற்கனவே முன்வைத்துள்ளார் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன்.

இப்பின்னணியிலேயே, மாகாண சபைகளில் மக்கள் பிரதிநிதிகள் இல்லாத போதிலும் மக்களுக்கான சேவைகள் இடையூறின்றி முன்னெடுக்கப்படுவதை உறுதிப்படுத்துவதற்காக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இந்தக் குழுவினை நியமித்துள்ளார் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

## இந்திய .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) இரண்டு நாட்கள் மீன்பிடிப்பதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளதாக எமக்குத் தகவல்கள் கிடைக்கின்றன.

இவ்வளவு நாட்களும் இந்திய மீனவர்கள் எவ்விதமான அனுமதிகளும் இன்றி இலங்கை கடற்பரப்புக்குள் நுழைந்து சட்டவிரோதமாக மீன்பிடித்து வந்தனர். அவ்விதமாக செயல்பட்டவர்களுக்கே இன்று வெளிவகார அமைச்சரும் கடற்றொழில் அமைச்சரும் அனுமதி வழங்கத் தீர்மானித்துள்ளனர்.

வடமாகாண கடற்பரப்பில் இந்திய மீனவர்களுக்கு மீன்பிடிப்பதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளதா இல்லையா என்பதை ஆட்சியாளர்கள் உடனடியாக உத்தியோகபூர்வமாக அறிவிக்க வேண்டும் - என்றார்.

## நீதித்துறை ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) நடவடிக்கைளை கவனமெடுக்காது விடுவது கவலைக்குரியது.

ஜனநாயகத்தின் மூன்று தூண்களான நீதிமன்றம், நாடாளுமன்றம், நிர்வாகம் என்பன ஒற்றுமையுடன் செயற்படுவது மிகவும் முக்கியமானதாகும். சுட்டத்தரணிகள் சங்கம் சுயாதீனமாகச் செயற்படும் என்ற உறுதியை நான் இங்கு வழங்குகின்றேன்.

அரசமைப்புக்கு முன்னுரிமை அளிக்கின்றோம். அதனைப் பின்பற்றுவோம். எனினும், நீதிமன்றத்திற்கு அழுத்தம் விடுக்கப்பட்டால் அச்சமின்றி அதற்கெதிரான நடவடிக்கைகளை எடுப்போம்.

எதிர்ப்புத் தெரிவிப்பதற்கான உரிமை அடிப்படை உரிமையாகும் அது அரசமைப்பில் உள்ளது. அரசமைப்பை பாதுகாப்பது இந்த நாட்டின் அனைவரினதும் கடமையாகும் - என்றார்.

## அரசு பக்கம் .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) மேர்வின் சில்வாவின் 79 ஆவது பிறந்தநாள் நேற்றாகும். இதனையொட்டி களனி ரஜமஹா விகாரையில் நேற்று அவர் வழிபாடுகளில் ஈடுபட்டார்.

அதன்பின்னர் செய்தியாளர்களிடம் பேசினார்.

"நான் அரசியலில் இருந்து ஒதுங்கவில்லை. ஒதுக்க முற்பட்டாலும் ஒதுங்கமாட்டேன். களனிப் பகுதிக்கு மீண்டும் சேவையாற்ற வேண்டும். மீண்டும் நாடாளுமன்றம் செல்வேன் - என்றார்.

## தவறு

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) எழுவதற்காக சர்வதேச நாணயநிதியம் 2.9 பில்லியன் டொலர்களை வழங்குவதற்கு அனுமதி அளித்துள்ளது.

அந்த வகையில் 333 மில்லியன் டொலர்கள் முதற்கட்டமாக அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. இவ்வாறான நிலையில் மக்களின் அனைத்து பிரச்சினைகளுக்கும் இந்த நிதி மூலம் தீர்வு வழங்கப்படும் என்று பரப்புரை செய்யப்படுகிறது.

ஆட்சியாளர்கள் இந்தப் பரப்புரையை திட்டமிட்ட முறையில் முன்னெடுத்து வருகின்றது அவ்வாறு செய்வது தவறாகும் ஏனென்றால் சர்வதேச நாணய நிதியத்தின் கடன் வசதி ஊடாக இனப்பிரசினைகளுக்கு தீர்வை காண்பிக்க முடியாது.

இதுவொரு பெரும் சிக்கல்கள் நிறைந்த நெருக்கடி. ஆகவே அது தொடர் பில் கவனம் செலுத்த வேண்டியது மிகமிக முக்கியமானதாகின்றது - என்றார்.

## ஜனாதிபதிக்கு ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) நடத்தாமல் இருப்பதற்கான அனைத்து நடவடிக்கைகளையும் அரசு எடுத்து வருகின்றது. சட்டம் - அரசமைப்பு, ஜனநாயகம், சம்பிரதாயம் இப்படி எந்த விடயத்தையும் பார்ப்பதாக அரசு இல்லை

20 தடவைகள் இந்தத் தேர்தலை நிறுத்துவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன என்று தேர்தல்கள் ஆணைக்குழுவே தெரிவித்துள்ளது.

தேர்தலை ஒத்திப்போடுவதற்குத் தேர்தல் என்ற ஒன்று இல்லையே என்றுகூறியுள்ளார் ஜனாதிபதி ரணில்.

உள்ளூராட்சி சபைத் தேர்தலுக்காக 82 ஆயிரத்து 800 வேட்பாளர்கள் வேட்பு மனுக்களைத் தாக்கல் செய்துள்ளனர். இவர்கள் செலுத்தியுள்ள கட்டுப்பணம் மாத்திரம் 186 மில்லியன் ரூபா. இப்படி இருக்கும்போது தேர்தல் என்ற ஒன்று இல்லை என்கின்றார் ஜனாதிபதி.

தேர்தலை நடத்துவதற்குப் பணப்பிரச்சினை இங்கில்லை. அதிக பணம் செலவழித்து பல நிகழ்வுகளை நடத்தி வருகின்றது அரசு. பெரஹெரா - சுதந்திர தின நிகழ்வு போன்றவற்றுக்கு அதிக பணம் செலவழிக்கப்பட்டது. அமைச்சரவையும் அதிகரிக்கப்படவுள்ளது. இதற்கெல்லாம் பணம் உண்டு. தேர்தலை நடத்துவதற்கு மாத்திரம்தான் பணம் இல்லை என்று அரசு கூறுகின்றது. - என்றார்.

## வரலாற்றில் ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) டலஸ் அழகப்பெரும தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

ஜனாதிபதிப் பதவியிலிருந்து கோட்டாபயராஜபக்ச விலகிய பின்னர் நாடாளுமன்றத்தில் நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தலில் நான் தோல்வியடைவதற்கு ஒரேயொரு காரணம் எதிர்க்கட்சியுடன் சேர்ந்து அரசொன்றை அமைப்பதற்கு எடுத்த முடிவுதான். நான் ஜனாதிபதியாக வந்தால் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸதான் பிரதமர் என்று அன்று பகிரங்கமாகக் கூறியிருந்தேன்.

நான் ஜனாதிபதியாகி இருந்தால் வரலாற்றில் முதல் தடவையாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் எம்.பிக்களும் அமைச்சரவையில் இருப்பதற்கு வாய்ப்பிருந்தது.

அநேகமாக ஒரு வருடத்துக்குள் நாட்டின் பொருளாதாரத்தைக் கட்டியெழுப்பியிருப்பேன். அதே வேளை, தேர்தல்களை யும் ஒழுங்கு முறையில் நடத்தியிருப்பேன்.

என்னோடு நிறைவேற்று அதிகாரமிக்க ஜனாதிபதி முறைமை ஒழிந்திருக்கும். நிறைவேற்று அதிகாரமிக்க ஜனாதிபதி முறைமை எந்தளவு மோசமானது என்பது இப்போது எங்களுக்குத் தெரிகின்றது.

மூன்று அரசமைப்புகளை நாம் கண்டுள்ளோம். அதில் இறுதியாக 1978இல் உருவாக்கப்பட்ட மூன்றாவது அரசமைப்பின் 21 ஆவது திருத்தச் சட்டத்தோடு நாம் நிற்கின்றோம்.

இந்த அரசமைப்புகள் உருவாக்கப்பட்டதன் நோக்கம் ஆட்சியில் இருக்கும் கட்சியை - அதன் தலைவரைத் பலப்படுத்துவதற்கும் எதிர்க்கட்சிகளை முடக்குவதற்குமாகும். மக்கள் நலன்களுக்காக - நாட்டின் நலன்களுக்காக இவை உருவாக்கப்படவில்லை.

தேர்தல் முறைமையும் அந்த நோக்கத்திலேயே உருவாக்கப்பட்டுள்ளன. இப்போதுள்ள தேர்தல் முறைமையை ஜே.ஆர் கொண்டு வந்தது ஐக்கிய தேசியக் கட்சி தொடர்ந்தும் ஆட்சியில் இருக்கவேண்டும் என்ற நோக்கில். அவரே அப்போது இதைக் கூறியுள்ளார்.

இப்போதுள்ள உள்ளூராட்சி சபைகளின் உறுப்பினர்களின் எண்ணிக்கையை 8 ஆயிரம் வரை அதிகரித்தவர் ரணில் விக்கிரமசிங்க. அவரே இப்போது சொல்கின்றார் எண்ணிக்கையைக் குறைக்கவேண்டும் என்று. அவரே அந்தப் பிழையைச் செய்துவிட்டு இப்போது அவரே அதைத் திருத்த வேண்டும் என்கின்றார். இந்த நிலைமைகள் மாற வேண்டும். நான் ஜனாதிபதியாகி இருந்தால் இந்த நிலைமைகளை மாற்றியிருப்பேன் - என்றார்.









# மட்டக்களப்பில் தொடருந்தை நிறுத்தி மக்கள் போராட்டம்

(பழுவூரான்)

மட்டக்களப்பு திராய்மடு பகுதியில் தொடருந்தை நிறுத்தி மக்கள் போராட்டத்தில் ஈடுபட்டனர். சுமார் ஒரு மணி நேரமாக இப் போராட்டம் தொடர்ச்சியாக இடம்பெற்றது.

மட்டக்களப்பிலிருந்து கொழும்பு நோக்கிச் சென்று கொண்டிருந்த தொடருந்தை திராய்மடு பகுதியில் மக்கள் ஒன்றிணைந்து நிறுத்தினர். இதனால் அவ்விடத்தில் பதற்றம் உருவானது,

திராய்மடு பகுதியில் பல வருட காலமாக தொடருந்துத் தண்டவாளத்தின் குறுக்கே மக்கள் வீதியைப் பயன்படுத்தி வந்திருந்த நிலையில் அந்தக் கடவையூடான குறுக்கு வீதியை மூடியமையே இப் பதற்ற நிலைக்குகட காரணம் என்று தெரிகிறது.

சம்பவத்திற்கு எதிர்ப்பு தெரிவித்த அப்பகுதி மக்கள் திரண்டு போராட்டத்தில் ஈடுபட்டனர், கையில் பதாதைகளுடன் சுமார் ஒரு மணி நேரமாக இப் போராட்டம் இடம்பெற்ற நிலையில் குறித்த இடத்திற்கு வந்த கொக்குவில் பொலிஸார் மக்களுடன் பேச்சு நடதத்தினர். நிறுத்திவைக் கப்பட்டிருந்த தொடருந்தை விடுவிக்குமாறு பொலிஸார் மக்களிடம் கோரிக்கை விடுத்த போதும் மக்கள் தமது போராட்டத்தை தொடர்ந்த வண்ணமிருந்தனர்.

தாம் பல வருட காலமாக செல்லும் வீதியை மீண்டும் கையளிக்க வேண்டுமென்பதே இந்த மக்களின் கோரிக்கையாக இருந்தது. சுமார் ஒரு மணி நேரத்தின் பின்னர் தொடருந்து தனது பயணத்தைத் தொடர மக்கள் அனுமதித்தனர்.

# லாவோஸின் பலவந்த நிதி மோசடி கும்பலிடம் சிக்கியிருந்த 24 இலங்கையர்கள் நாடுவருகை

லாவோஸின் பலவந்த நிதி மோசடி முகாமொன்றில் சிக்குண்டிருந்த 24 இலங்கையர்கள் மீட்கப்பட்டுள்ளனர்.

லாவோஸின் பலவந்த நிதி மோசடியில் சிக்கியிருந்த இலங்கையர்கள் மோசடிகளில் ஈடுபடுமாறு துன்புறுத்தப்பட்ட நிலையில் மீட்கப்பட்டுள்ளனர் - இவர்கள் பாதுகாப்பாக இலங்கைக்கு அழைத்து வரப்பட்டுள்ளனர்.

நான்கு மாதங்களுக்கு முன்னர் வர்த்தக விசாவில் தகவல்தொழில்நுட்ப துறை வேலைகளுக்காகலாவோஸ் சென்ற இலங்கையர்களே இந்த அனுபவத்தை எதிர்கொண்டுள்ளனர்.

இவர்கள் லாவோஸ் சென்றதும் இவர்களின் கடவுச்சீட்டுகள், தொலைபேசிகள், ஆவணங்கள் அனைத்தையும் தொழில் வழங்குநர் பறித்துவைத்துக்கொண்டார் எனத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

இதன் பின்னர் அவர் இலங்கையர்களை இணையமோசடிகளில் ஈடுபடுமாறு பலவந்தப்படுத்தியுள்ளார்.

ஆனால் இலங்கையர்கள் அதற்கு மறுப்பு தெரிவித்ததும் தொழில்வழங்குநர் இலங்கையர்களை லாவோசில் உள்ளபகுதியில் அடைத்து வைத்துள்ளார்.

எனினும் மிகவும் ஆபத்தான சவாலான சூழ்நிலைகளிற்கு மத்தியிலும் இலங்கையர்கள் இலங்கை அதிகாரிகளிற்கு அறிவித்த பின்னர் அங்கிருந்து தப்பி தாய்லாந்து சென்றுள்ளனர்.

பின்னர் இவர்கள் 24 ஆம் திகதி இலங்கை வந்து சேர்ந்துள்ளனர்.

# 900 சுற்றுலாப் பயணிகளுடன் நாடு வந்த பயணிகள் கப்பல்

வைக்கிங் நெப்டியூன் என்ற அதிசொகுசு பயணிகள் கப்பல் நேற்று (சனிக்கிழமை) கொழும்பு துறைமுகத்தைவந்தடைந்துள்ளது.

900 சுற்றுலாப் பயணிகளுடன் இந்த சொகுசு கப்பல் இலங்கையின் கொழும்பு துறைமுகத்தை வந்தடைந்துள்ளது.

இந்தக் கப்பலில் 400 ஊழியர்கள் சேவையாற்றுகின்றமை குறிப்பிடத்தக்கது.




காலைக்கதிர் Kalaikkathir

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: இல.551 A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

## ஆளுநர் பதவியின் நோக்கமும் அதிகாரப் பயன்பாடும்

இலங்கை – இந்திய ஒப்பந்தத்தின் அடிப்படையில் மாகாண சபைகளை உருவாக்கியபோது ஆளுநர் பதவிகளும் உருவாக்கப்பட்டன. தமிழ்த் தேசியப் போராட்டத்தின் விளைவாக, ஆயுதப் போராட்டத்தின் வழியாகவே மாகாண சபைகள் உருவாக்கப்படும் ஏதுநிலைகள் தோன்றின. அத்தகைய ஒரு சூழலில் மாகாண சபைகளை தனித்து – அதன்போக்கில் – இயங்கவிட்டால் எங்கே அவை பிரிந்து தனிநாடாகச் சென்றுவிடக்கூடுமோ என்கிற அச்சம் கொழும்பை ஆளும் தரப்பிற்கு இருந்திருக்கக்கூடும் என்பது நிச்சயம். அதன் நியாயத்தையும் மறுக்கமுடியாது. அதனால்தான் மாகாண சபைகள் சட்டம் உருவாக்கப்பட்டபோது, சபைகளின் அதிகாரங்களைவிட ஆளுநர்களின் அதிகாரங்கள் அதிகமாக இருக்கும் வகையில் கொழும்பு பார்த்துக்கொண்டது. அதாவது காரியங்கள் தம் கைகளை மீறிப் போய்விடக்கூடாது என்பதை உறுதிப்படுத்துவதற்கான ஒரு “செக்” அது. அதற்காக ஆளுநர்கள் மாகாண சபைகளின் முடிவுகளுக்கு மாறாகச் செயற்படவேண்டியவர் கள் என்கிற நிர்ப்பந்தமோ, நியாயமோ அதில் கிடையாது. அவை தவறுகளைத் தடுப்பதற்கான அதிகாரங்களே தவிர, ஆளுவதற்கான அதிகாரங்கள் அல்ல அவை.

மாகாண ஆளுநர்கள் பதவி என்பது ஒப்பீட்டளவில் ஒரு சம்பிரதாயபூர்வமான பதவி மட்டுமே. அது ஒரு நியமன அதிகாரப் பதவி அல்ல என்பதை அந்தப் பதவியில் அமர்பவர்கள் புரிந்துகொள்வது அவசியம். அதிலும் முரண்பாடுகள் அதிகம் எழக்கூடிய வடக்கு, கிழக்கு மாகாணங்களின் அதிகாரங்களில் அமர்பவர்கள் அது குறித்து அதிக புரிந்துணர்வுடன் இருப்பதும் செயற்படுவதும் அவசியம். அந்தப் பதவியில் அமர்பவர்களுக்கு மக்களுக்குச் சேவை செய்ய வேண்டும் என்ற ஆசையோ விருப்பமோ இருந்தால் அவர்கள் அரசியலில் ஈடுபட்டு, மக்களின் ஆதரவைப் பெற்று அதைச் செய்ய முடியும். அதற்காக அதிகாரம் கையில் கிடைத்திருக்கிறது என்பதற்காக அதனை மக்கள் நலனுக்காகப் பயன்படுத்துகின்றேன் என்று புறப்படக்கூடாது.

வடக்கு மாகாண ஆளுநரைப் பொறுத்தவரையில் அத்தகைய இரு சந்தர்ப்பங்கள் இப்போது நிகழ்ந்துள்ளன. முதலாவது அரசமைப்புக்கு முரணாக அவர் இரு நியதிச் சட்டங்களை இயற்றியிருக்கின்றார். வடக்குமாகாண சுற்றுலாத் துறை தொடர்பிலும் வாழ்வாதார முகாமைத்துவம் தொடர்பிலும் அவர் இரு நியதிச் சட்டங்களை ஆக்கி அவற்றை விசேட அரசிதழ் மூலமாக அறிவித்தும் இருக்கிறார். அவர் அப்படிச் செய்தது தவறு என்று இப்போது நீதிமன்றத்தில் தெரிவிக்கப்பட்டிருக்கின்றது. அவர் அறிவித்த நியதிச் சட்டங்களை அவரே திரும்பப் பெறவேண்டிய நிலையும் ஏற்பட்டுள்ளது.

மக்களின் நலன் கருதி அவர் அந்த நியதிச் சட்டங்களை ஆக்குவதற்கு விரும்பியிருக்கலாம். ஆனால், அதைச் செய்வதற்கான இடம் ஆளுநர் பதவியல்ல. அதிகாரத்தில் அமர்ந்துவிட்டால் பெயரை நிலைநிறுத்தக்கூடியதாக எதையாவது செய்துவிடவேண்டும் என்று நினைப்பதற்கு ஆளுநர் பதவி அரசியல் பதவியுமல்ல. அது ஒரு சம்பிரதாயபூர்வ மற்றும் கண்காணிப்புக்கான பதவி மட்டுமே. இங்கே மக்கள் பிரதிநிதிகள்தான் எந்தவொரு விடயத்திலும் முடிவுகளை எடுக்கவேண்டும். அதற்காகத்தான் மக்களால் அவர்கள் தேர்ந்தெடுக்கப்படுகிறார்கள். அவர்களின் முடிவு தவறானால் அதற்கான விளைவுகளையும் அவர்களே எதிர்கொண்டாகவேண்டும். அதைவிடுத்து மக்கள் பிரதிநிதிகள் தவறு என்று தெரிவித்து ஆளுநர் முடிவுகளை எடுக்க முடியாது; கூடாது.

அடுத்ததாக இப்போது நாவலர் கலாசார மண்டபத்தை கொழும்பு இந்து கலாசார அமைச்சிடம் திருப்பி ஒப்படைக்கும்படி ஆளுநர் உத்தரவிட்டிருக்கின்றார். இது தொடர்பில் மக்கள் பிரதிநிதிகளிடம் யாழ். மாநகர சபை இருந்தபோது ஒரு திட்டம், ஏற்பாடு எல்லாமும் இருந்திருக்கின்றன. அதை மீறி இப்போது அந்தக் கட்டடத்தை ஒப்படைக்கச் சொல்வது ஆளுநரின் ஆதிகார முறைகேடாகவே அமையும். அதைச் செய்வதற்கான அதிகாரம் அவருக்கு இருக்கலாம். ஆனால் அது மக்களின் விருப்பத்திற்கு மாறானது. மக்களின் சார்பில் அத்தகைய முடிவுகளை எடுக்கும் அதிகாரம் அவருக்கு வழங்கப்படவில்லை. மக்கள் சபைகள் தவறிழைத்தால் அதனைச் சுட்டிக்காட்டுவதற்கும் அவை தவறைச் சரிசெய்து கொள்வதற்குமாகத்தான் ஆளுநருக்கு அவற்றை அனுமதிக்கும் அல்லது தடுக்கும் அதிகாரங்கள் வழங்கப்பட்டுள்ளன. அதைத் தவறாக வழிநடத்தி அதிகாரங்கள் பயன்படுத்துவதற்கே இருக்கின்றன என்கிற வகையில் வடக்கு ஆளுநர் தொடர்ந்தும் நடப்பது முரண்பாடுகளையே இன்னும் வளர்க்கும்.

இது விடயத்தில் அரசியலையும் நிர்வாகத்தையும் நன்கு புரிந்துகொண்டிருக்கக்கூடியவரான, அனுபவசாலியான பள்ளிக்கார ஒரு நல்ல உதாரணம். தனது அதிகார வரம்பு என்ன அதனை எப்படிச் செயற்படுத்த வேண்டும் என்பதில் அவர் தெளிவாக இருந்தார். அவரோடும் மாகாண சபைக்குப் பிரச்சினைகள் இருந்தன. அது அரசியல் சார்ந்தது. அவர் தனது ஆளுநர் அதிகாரத்தை சபையின் தீர்மானங்களைச் செயற்படுத்துவது தொடர்பில் பயன்படுத்தியிருக்கிறார். ஆனால் மக்களின் சார்பிலோ மக்கள் பிரதிநிதிகளின் சார்பிலோ அவற்றைச் செயற்படுத்தியதில்லை.

அந்த அனுபவங்களில் இருந்து புரிந்துகொள்வதும் செயற்படுவதும் மாகாண ஆளுநர்களின் கடமை. அவர்கள் கட்சிகளினதோ அரசியல்வாதிகளினதோ குறைந்தபட்சம் அதிகாரத்தில் இருக்கும் அரசுத் தலைவரதோ பிரதிநிதி அல்லர் என்பதை மனதிலிருத்தி செயற்படுவதன் மூலமே அதிகாரப் பகிர்வு முறையை நடைமுறையில் அர்த்தமுள்ளதாக்கிக்கொள்ளலாம்.

# சர்வதேச நாணய நிதிய கடன் ஒரு முழுமையான தீர்வல்ல

### அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா கருத்து



சர்வதேச நாணய நிதியத்தின் கடன் ஒத்துழைப்பை எமக்கான முழுமையான விடியலாகக் கருதி விடக்கூடாதென அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

சர்வதேசநாணயநிதியத்தின் உடன்படிக்கை தொடர்பில் அதிபர் ஆற்றிய விசேட உரை மீதான விவாதத்தில் உரையாற்றும்போதே அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா நாடாளுமன்றத்தில் குறிப்பிட்டுள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில் -

அத்துடன் பொருளாதார நெருக்கடிக்கு மத்தியில் மூச்சு விடுவதற்கான சந்தர்ப்ப மாகவே இதனை எடுத் துக் கொள்ளவேண்டும் எனவும் அவர் சபையில் தெரிவித்துள்ளார். சர்வதேச நாணய நிதியம், உலக வங்கி உட்பட ஏனைய நிதி நிறுவனங்கள், நாடுகளிடமிருந்து மொத்தமாக 700 கோடி அமெரிக்கன் டொலர்களை கடனாக பெற்றுக்கொள்ள முடியுமென்ற தகவலை அதிபர் ரணில் தெரிவித்துள்ளார்.

இந்தக் கடன்கள் தொடர்பில் எவரும் வெற்றிக்களிப்பில் மயங்கிவிடக்கூடாது. நாட்டின் பொருளாதார நெருக்கடிக்கு மூச்செடுக்கக்கூடிய சந்தர்ப்பமாக மட்டுமே இதனை எடுத்துக்கொள்ளவேண்டும். அதை விடுத்து இதை முழுமையான விடியலென நாம் எடுத் துக்கொள்ளக்கூடாது என்று அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

சபையில் தொடர்ந்தும் உரையாற்றிய அமைச்சர் - மூன்று தசாப்த யுத்தம், கொரோனா, அதனையடுத்து பொருளாதார நெருக்கடி, ரஷ்யா - உக்ரைன் யுத்தம் என பல்வேறு பாதிப்புகளை நாடு எதிர்கொண்டதை அனைவரும் அறிவோம்.

உரிமைப் போராட்டம் இலங்கை - இந்திய ஒப்பந்தத்துக்குப் பின்னர் அழிவு போராட்டமாக உருவெடுத்தது. அந்த அழிவுப் போராட்டம் எமது மக்களின் சொத்துக்களையும் வளங்களையும் அழித்து விடுவதோடு எம்மையே அழித்துவிடும்.

வன்முறைக்கூடாக எம்மால் எதையும் சாதிக்க முடியாது என்ற நிலையில் பேச்சுக் கூடாகவே பிரச்சினைகளுக்குத் தீர்வு காண முடியுமென நான் வெளிப்படையாகவே அறிவித்திருந்தேன்.

சொற்படி கேளாதவர்களாக, அவர்கள் எனது கருத்துக்களை அறிந்தும் அறியாதவர்களாக அரசியல் நடத்தி எமது மக்களின் அழிவுக்கு வழி வகுத்தனர். வன்முறை வழியிலேயே தொடர்ந்தும் செயற்பட்டனர்.

# மட்டு. கடற்தொழிலார்களின் வயிற்றில் அடிக்கும் டக்ளஸ்

இலங்கையில் தற்போது ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடிக்கு மத்தியிலும் தங்களது உயிரை பணயம் வைத்து தினம் தினம் இரவு பகல் பாராது கடலுக்குச் சென்று தொழில்செய்துவரும் கடற்தொழிலாளர்களின் வாழ்வாதாரம் கேள்விக்குறியாகியுள்ளதாக பாதிக்கப்பட்ட கடற்தொழிலாளர்கள் தெரிவித்துள்ளனர்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் கடந்த 2009 ஆம் ஆண்டு தொடக்கம் இன்று வரை கடல் அட்டை பிடித்து வரும் கடற்தொழிலாளர்களுக்கு அனுமதி பத்திரம் வழங்குவதில் இழுபறி நிலை ஏற்பட்டு வருவதாகவும் டக்ளஸ் தேவானந்தாவின் பெயரை பாவித்து கடற்தொழிலாளர்கள் அல்லாத சிலருக்கு தனிப்பட்ட ரீதியில் அனுமதிபத்திரம் வழங்கியுள்ளதாகவும் கவலைவெளியிட்டுள்ளனர்.

கடற்தொழிலில் அனுபவம் இல்லாதவர்களுக்கும் அரசியல் அதிகாரத்தைப்

### பொதுமக்கள் விசனம்

பயன்படுத்தி மட்டக்களப்பு மாவட்ட கடற்தொழில் திணைக் களமும் டக்ளஸ் தேவானந்தாவின் ஆதரவாளர்கள் எனக் கூறும் சிலருக்கு குறித்த அனுமதி பத்திரங்கள் வழங்கியுள்ளமை கடலை நம்பி வாழ்கின்ற கடற்தொழிலாளர்கள் மத்தியில் பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

கடற்தொழிலாளர்கள் நாரா நிறுவனத்துடன் பதிவு செய்து 2013 ஆம் ஆண்டு முதல் சட்டரீதியாகவே மேற்படி தொழிலைசெய்துவருகின்றனர்.

அனுமதி பத்திரத்தில் பகலில் மட்டும் தொழில் செய்யலாம் என்ற நிபந்தனை அடிப்படையில் இருக்கின்ற காரணத்தால் பகல் நேரம் மாத்திரமே கடற்தொழிலாளர்கள் செய்துவந்தபோதிலும் டக்ளஸ் தேவானந்தாவின் அதிகாரத்தைப் பயன்படுத்தி இரவு நேரத்திலும் அட்டைத் தொழில் ஈடுபட்டு வருவதாகவும் இதனால் கடலை நம்பி வாழ்கின்ற கடற்தொழிலாளர்கள் கடும் பாதிப்புக்குள்ளாகியுள்ளனர் எனத் தெரிவித்துள்ளனர்.

மேற்படி அமைச்சரின் நடவடிக்கை காரமாக கடற்தொழிலை நம்பி வாழ்கின்ற கடற்தொழிலாளர்களின் வாழ்வாதாரம் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளதுடன் 200 இற்கும் மேற்பட்ட கடற்தொழிலாளர்கள் தொழிலை இழந்து காணப்படுகின்றனர் எனக் குறிப்பிடுகின்றனர்.

இதுவரை காலமும் நேர்த்தியாக இந்த கடற்தொழிலாளர்களுக்கு அனுமதி பத்திரத்தை வழங்கிவந்த மட்டக்களப்பு மாவட்ட கடற்தொழில் திணைக்கள அதிகாரி மற்றும் மீன் பிடித்துறை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா உடனடியாக இதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் இல்லாத பட்சத்தில் தாங்கள் தங்களது எதிர்ப்பை வெளிப்படுத்த உள்ளதாகவும் தெரிவித்துள்ளனர்.

டக்ளஸ் தேவானந்தா மீது வடக்கு கிழக்கு கடற்தொழிலாளர்கள் பல விமர்சனங்களை முன் வைத்து கொண்டு வருகின்ற நிலையிலும் தற்போது ஒரு தேர்தல் அறிவிக்கப் பட்டுள்ள நிலையில் இவ்வாறான நடவடிக்கையில் டக்ளஸ் தேவானந்தா ஈடுபட்டு வருகின்றமை கடற்தொழிலாளர்கள் மத்தியில் கடும் விரக்தியை உண்டு பண்ணியுள்ளதாகத் தெரிவித்துள்ளனர்.

கடற்தொழிலாளர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைக்கு மட்டக்களப்பு கடற்தொழில் திணைக்களமும் அமைச்சர் டக்லஸ் தேவானந்தாவும் உடன் நடவடிக்கை எடுத்துத் தரவேண்டும் எனவும் குறிப்பிட்டுள்ளனர்.

# ஊழல் மூலம் சம்பாதித்த சொத்துக்களை அரசுடைமையாக்கும் ஏற்பாடு வேண்டும்

### சட்டத் திருத்தம் பற்றி ஹக்கீம் கருத்து

ஊழல் ஒழிப்பு சட்டமூலத்தை கொண்டுவந்தால் மாத்திரம் ஊழல்களைத் தடுத்து விட முடியாது ஊழல் மூலம் சம்பாதித்த சொத்துக்களை அரசுடமையாக்கும் ஏற்பாடுகளை ஊழல் ஒழிப்பு சட்டமூலத்தில் உள்ளடக்க வேண்டும் என ஸ்ரீலங்கா முஸ்லிம்காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீம் தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் இடம்பெற்ற சர்வதேச நாணய நிதிய ஒத்துழைப்பு தொடர்பில் ஜனாதிபதியின் விசேட உரை மீதான சபை ஒத்திவைப்பு விவாதத்தில் உரையாற்றுகையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் குறிப்பிட்டவை வருமாறு -

சர்வதேசநாணயநிதியத்தின் ஒத்துழைப்பு தற்போது பிரதான பேசுபொருளாக உள்ளது. இதற்கு முன்னர் 16 தடவைகள் சர்வதேசநாணய நிதியத்தின் வேலைத்திட்டம் முன்னெடுக்கப்பட்டுள்ளது.

இந்த சுழற்சியில் உள் வாங்கி 17 ஆவது தடவையாக சென்றுள்ளோம். முதலில் சர்வதேச நாணய நிதியத்துக்குச் சென்று பின்னர் பின்வாங்கி நெருக்கடியென வரும்போது மீண்டும் போகின்றோம்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அனுபவம் வாய்ந்த அரசியல்வாதியாக இருக்கின்றார். நாட்டில் வரிகளை அதிகரித்துள்ளதால் தொழிற்சங்கங்கள் போராட்டங்களை முன்னெடுத்து வருகின்றன. போராட்டங்களை பொலிஸார், இராணுவத்தை கொண்டு முடக்குகின்றார்.

சர்வதேசநாணயநிதியத்தின் நிபந்தனைகளுக்கமைய ஊழல் ஒழிப்பு சட்டத்தை கொண்டுவரவுள்ளதாக ஜனாதிபதி கூறுகின்றார். அந்த சட்டத்தின் மூலம் மாத்திரம் ஊழலை தடுத்துவிட முடியாது. அதில் ஊழல்களால் பெற்றுக்கொண்ட சொத்துக்களை சுவீகரிக்கக்கூடிய ஏற்பாடுகளை உள்ளடக்க வேண்டியுள்ளது.

இதேவேளை புதிய மத்திய வங்கி சட்டத்திருத்தத்தை கொண்டு வரும் போதும், சில திருத்தங்களை முன்வைக்க வேண்டியுள்ளது. அரசியல் தலையீடுகள் இல்லாது செயற்படக்கூடிய வகையில் அமைய வேண்டும். மறுசீரமைப்பு பணிகளில் இருந்து விட்டுச் செல்லக் கூடாது. - என்றார்.

# அமெ. நலனோம்பு அமைப்புகளுக்கு மஹிந்த சமரசிங்க நன்றி பாராட்டு

இலங்கைக்கு அவசியமான மருந்துப் பொருள்கள் மற்றும் மருத்துவ உபகரண உதவிகளை நன்கொடையாக வழங்கிவரும் அமெரிக்காவின் 3 முக்கிய நலனோம்பு அமைப்புகளுக்கு அந்நாட்டுக்கான இலங்கைத் தூதுவர் மஹிந்த சமரசிங்க நன்றி தெரிவித்துள்ளார்.

அமெரிக்காவிலுள்ள பல்வேறு மனிதாபிமான நன்கொடை வழங்கல் அமைப்புக்களுடன் முன்னெடுத்த கலந்துரையாடல்களின் மூலமே இலவச மருந்துகள் மற்றும் மருத்துவ உபகரணங்கள் அடங்கிய இந்த உதவி இலங்கைக்குக் கிடைத்திருப்பதாக வோஷிங்டனில் உள்ள இலங்கைத்தூதரகம் தெரிவித்துள்ளது.

அதன்படி மருந்து மற்றும் மருத்துவ உபகரணங்கள் அடங்கிய 8 கொள்கலன்கள் ஏற்கனவே சுகாதார அமைச்சுக்கு அனுப்பி வைக்கப்பட்டிருப்பதாகவும், அவை சுமார் 27 மில்லியன் அமெரிக்க டொலர் (10 பில்லியன் இலங்கை ரூபா) பெறுமதியுடையவை என்றும் இலங்கைத்தூதரகம் குறிப்பிட்டுள்ளது.

இந்நிலையில் உரியகாலப்பகுதியில் இலங்கைக்கு அவசியமான மருத்துவ உதவிகள் உள்ளிட்ட நன்கொடைகளை வழங்கிய ‘ஹார்ட் டு ஹார்ட் இன்டர்நெனல்’, ‘ஹோப் வேல்ட்வைட்‘ மற்றும் ‘அமெரிக்கெயார்ஸ்’ ஆகிய மூன்று அமைப்புக்களுக்கும் அமெரிக்காவுக்கான இலங்கைத்தூதுவர் மஹிந்த சமரசிங்க தனது நன்றியை வெளிப்படுத்தியுள்ளார்.

கடந்த 2022 ஆம் ஆண்டு ஜூலை மாதத்திலிருந்து ஹார்ட் டு ஹார்ட் இன்டர்நெனல் அமைப்பு 23 மில்லியன் டொலருக்கும் மேற்பட்ட பெறுமதியுடைய 4 உதவிப்பொருள் கொள்கலன்களையும், அமெரிக்கெயார்ஸ் அமைப்பு 853,000 டொலர் பெறுமதியுடைய 3 உதவிப்பொருள் கொள்கலன்களையும், ஹோப்வேல்ட்வைட் அமைப்பு 2.7 மில்லியன் டொலர் பெறுமதிவாய்ந்த உதவிப்பொருள் கொள்கலன்களையும் இலங்கைக்கு அனுப்பி வைத்துள்ளமை குறிப்பிடத்தக்கது.


OKAYA
ELECTRIC VEHICLES
dsl
We lead the way...!
பெட்ரோல் பைக்குகளை பயன்படுத்துவதை
விட 77% இலாபமான பாவனைக்கு
The inEVitable
Future of Smart Mobility
FAAST-F4
140-160 KM ஒருமுறை*
சார்ஜ் செய்தால்
FAAST-F2T
80-85 KM ஒருமுறை*
சார்ஜ் செய்தால்
FREEDOM
70-75 KM ஒருமுறை*
சார்ஜ் செய்தால்
Rs.550,000/- இருந்து
வண்ணத்தெரிவுகள்:
conditions apply*
இந்தியாவில் அதி வேகமாக
விற்பனையாகும் மின்சார வாகனம்
2 வருட உத்தரவாதம்
3 இலவச சேவைகள்
Visit DSL EV Experience Center : # 525, Union Place Colombo 02
Hotline - 070 300 9555



# போக்குவரத்துச் சபை தலைவர் கிளிநொச்சி சாலைக்கு வருகை

கிளிநொச்சி, மார். 26

இலங்கை போக்குவரத்து சபை தலைவர் கே.டி.அல்விஸ் சனிக்கிழமை கிளிநொச்சி சாலைக்கு கண்காணிப்புப் பயணம் மேற்கொண்டிருந்தார். கிளிநொச்சி சாலையில் நிலவும் தேவைப்பாடுகள் மற்றும் ஊழியர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் தொடர்பாக ஆராயும் நோக்குடன் வருகைதந்திருந்தாரென்று தெரிவிக்கப்பட்டது.

# உலக தாய் மொழி தின நிகழ்வு கிளிநொச்சியில்

இலங்கை குமரித்தமிழ் பணி மன்றத்தின் உலக தாய்மொழி தின நிகழ்வும் ஆறுமுக நாவலர் மற்றும் மருத்துவர் சாமுவேல் பீச்கிறீன் ஆகியோரின் 200வது ஆண்டுநினைவு கூரல்நிகழ்வும் கிளிநொச்சி கூட்டுறவு மண்டபத்தில் இலங்கை குமரித்தமிழ் பணி மன்றத்தின் ஏற்பாட்டில் நடைபெற்றது.

தகைசார் வாழ்நாள் பேராசிரியர் அ.சண்முகதாஸ் ,கோப்பாய் ஆசிரியர் கலாசாலை முதல்வர் ச.லலீசன், கலைஞர்கள், என பலரும் கலந்து கொண்டிருந்தனர்.

இலங்கை குமரித்தமிழ் மன்றத் தின் பத்தாண்டு நிறைவை முன்னிட்டு மலரும் வெளியிடப்பட்டது. மூத்த கலைஞர்களும் கௌரவிக்கப்பட்டனர்.

# கஞ்சா செடிகள் வளர்த்தவர் திருகோணமலையில் கைது

சூட்சுமமான முறையில் கஞ்சா செடிகளை வளர்த்து வந்த சந்தேக நபரொருவரை திருகோணமலை – நிலாவளி பொலிஸார் கைது செய்துள்ளனர்.

திருகோணமலை – பாலையூற்று முருகன் கோயில் வீதியைச் சேர்ந்த 41 வயதுடைய சந்தேகநபர் ஒருவரே நிலாவெளி பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

காணியொன்றில் கஞ்சா தோட்டம் ஒன்றை வளர்த்து வருவதாக திருகோணமலை மாவட்ட அரச புலனாய்வு சேவை பணியகத்துக்குக் கிடைத்த தகவலின் அடிப்படையில் சந்தேகநபர் கைது செய்யப்பட்டுள்ளார்.

சந்தேகநபரால் வீட்டின் பின்புறம் மிக நுணுக்கமாக பயிரிடப்பட்டிருந்த 08 கஞ்சா செடிகள் (உயரம் 08 அங்குலம் முதல் 05 அடி வரை) மற்றும் 1 கிலோ 361 கிரேம் காயவைத்த நிலையில் கஞ்சா செடிகளை மீட்டுள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபரை போதைப்பொருள் கட்டளைச் சட்டத்தின் 54 (ஏ) கீழ் பயிர்ச்செய்கை மற்றும் கஞ்சா போதைப் பொருள்களைத் தம் வசம் வைத்திருந்தமை ஆகிய குற்றங்களின் கீழ் திருகோணமலை நீதிவான் நீதிமன்றில் முன்னிலைப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இந்தச் சம்பவம் குறித்த மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருவதாக நிலாவெளி பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

# கஞ்சாவுடன் ஒருவர் நெல்லியடியில் கைது

இரண்டு கிலோ கிராம் கேரளா கஞ்சாவை எடுத்துச் சென்றார் என்ற குற்றச்சாட்டில் ஒருவர் நெல்லியடிப் பொலிசாரால் கைது செய்யப்பட்டார்.

வதிரி - திக்கம் வீதி ஊடாக கஞ்சா கடத்தப்படுவதாக நெல்லியடியில் உள்ள தேசிய புலனாய்வுப் பிரிவினருக்கு கிடைக்கப்பெற்ற இரகசிய தகவலுக்கு அமைய வெள்ளிக்கிழமை இரவு நெல்லியடி பொலிஸ் பொறுப்பதிகாரி காஞ்சன விமலவீரதலைமையில் உபபொலிஸ் பரிசோதகர் இரட்ணாயக்கா உள்ளிட்ட பொலிஸ் அணியினர் தேவரையாளிப் பகுதியில் சந்தேகத்துக்கிடமான முறையில் நடமாடிய இளைஞர் ஒருவரை 2 கிலோ 90 கிராம் கேரள கஞ்சாவுடன் கைது செய்தனர்.







கிளிநொச்சியில்
ஐஸ்வர்யம்
பெருவிருந்து மண்டபம்
Ishwaryam Banquet Hall
Tel:- 021 228 3701, 071 7354308
Whatsapp:- 071 7736 4308
No.315, Kandy Road, Kilinochchi
அன்பான வரவேற்பு
தமிழர் பாரம்பரிய உணவு வகைகள்
இந்தியன் இனிப்புப் பண்டங்கள்
இந்தியன் உணவுவகைகள்
Online booking இற்கு விசேட விலைக்கழிவாக 30% பெற்றுக்கொள்ளலாம்.
சகலவிதமான நிகழ்வுகளும் புதிதாக வடிவமைக்கப்பட்ட அனைத்து வசதிகளுடனும் அழகான விருந்துபசார மண்டபம்
ISHWARYAM BANQUET HALL
BANQUET MEALS HALL
FULL OPTION
MAIN DIHES
Vegitable Fried Rice with Panner & Ghee - 900/=
Chiken Fried Rice with Vegetable - 1100/=
Kothu Rotty With Vegitable in Indian Style
DESSERT
ice Cream Cup - 60/=
Fruit Salad - 60/=
I ce Cream & Fruit Salad - 100/=
Cream Caramel - 120/=
SPECIAL MENU PACKAGE
BEVERAGES
jUICE 200 ml - 70/=
Milk Drink - 70/=
Cocacola M - 70/=
Pepsi M - 70/=
Swchpees Tin - 250/=
Coca Cola Tin - 250/=

# RADIANT DAWN

**A Sunday Supplement in English to Kalaikkathir**

**Page I** English for all **Sunday the 26th of March 2023**


**We welcome students' articles in word for publication**
**-Editor-**
kalaikkathiredu@gmail.com

## *Read the following passage and Answer: the question that follows.*



When cats run home and light is come, And dew is cold upon the ground, And the far off stream is dumb, And the whirring sail goes round And the whirring sail goes round Alone and warming his five wits The white owl in the belfry sits.

When merry milkmaids click the latch, And rarely smells the new mown hay. And the cock hath sung beneath the thatch Twice or thrice his roundedley Twice or thrice his roundedley Alone and warming his five wits The white owl in the belfry sits.

**1. The arrival of the morning is heralded by the:**
(a) running stream
(b) tower clock
(c) fishermen cry
(d) cock's singing

**2. The owl prefers:**
(a) hay mowing
(b) loneliness
(c) hooting with other owls
(d) watching of milk maids

**3. The poem describes:**
(a) cats
(b) milkmaids
(c) cocks
(d) an owl

**4. A word in the poem which means "a roof covering 'is**
(a) Whirring
(b) thatch
(c) hay
(d) latch

**5. Morning activities described in the poem are:**
(a) Milking of cows and cocks crowing
(b) mowing of grass and running of stream
(c) running of dogs and running of stream
(d) hooting of owls and barking of dogs

I'm an angel disguise with dimpled cheeks and laughing eyes. Don't you want me? I am your baby. I have come as a gift from heaven's hall in your heart. Oh, hear my call Mother keep me I am your baby Oh Mother, let me live, don't take away my life. Mother let me live. You know it isn't right to stop me being born, I want to be yours Oh Mother, let me live, don't take away my life. Mother let me live.

I want to live my life. Mother, you will see when you look at me and you hold me in your arms You'll fall in love with me, Like a flower in your care, I am a gift so pure and fair. Don't you want me? I am your baby. My little life please don't abort, let me live, don't cut me short. Mother, keep me I am your baby.

**1. The poem is a cry of:**
(a) an angel
(b) an unborn baby girl
(c) a daughter
(d) a girl child

**2. The speaker is in danger because:**
(a) the mother is cruel
(b) she is ugly
(c) she is a girl
(d) people don't like her

**3. The expression that expresses the girl child's desire to live is :**



(a) I'm an angel
(b) I have come as a gift
(c) keep me I am your baby
(d) hear my call

**4. The mother will fall in love with the girl when:**
(a) she will be born
(b) she will be gifted
(c) she will grow
(d) she will hold her in her arms

**5. The poet wonders why people abort girls even when:**
(a) they are tender, pure and fair
(b) it is a sin
(c) it is illegal
(d) it is a crime

## Complete the following sentences using an appropriate word or phrase. Write your answers on a piece of paper and check them with the answers given at the end of this page.

**1. The university allows students to .................. work with education.**
a) alternate
b) access
c) supplement
d) compliment

**2. Now that our supply of fossil fuels is nearly ..................., we must find ................... sources of energy.**
a) consumed, alternate
b) exhausted, renewable
c) over, guaranteed
d) sufficient, guaranteed

**3. The hunter was attacked by a .................. of wolves.**
a) herd
b) gang
c) pack
d) flock

**4. She has an excellent ...................... of Spanish.**
a) authority
b) information
c) command
d) know-how

**5. The search for the missing hikers was ................ by heavy snowfall.**
a) denied
b) hampered
c) accelerated
d) prevented

**6. People traveling across deserts may see objects which are not really there. Which of the following terms is used to refer to this phenomenon?**
a) mirage
b) montage
c) vintage
c) melange

**7. To be ..................., I don't think you did the right thing.**
a) clever
b) free
c) frank
d) straight

**8. Winning the Oscar Award was a ...................... in her career.**
a) yardstick
b) milestone
c) memorial
d) sign-post

**9. Which of the following words is closest in meaning to the word 'mania'?**
a) greatness
b) madness
c) stupidity
d) fame

**10. Good restaurants serving pure vegetarian food are hard to ..........................**
a) get through
b) come by
c) take in
d) get in

**Answers**

1. Alternate
2. Exhausted, renewable
3. Pack
4. Command
5. Hampered
6. Mirage
7. Frank
8. Milestone
9. Madness
10. Come by



The great advantage of early rising is the good start it gives us to our day's work. The early: riser has done a large amount of hard work before other men have got out of bed. In the early morning the mind is fresh, and there are few sounds or other distractions, so the work done at that, fresh is generally well done. In many cases the early riser also finds time to take some exercise in the fresh morning air, and this exercise supplies him with a fund of energy that will last until the evening.

By beginning so early, he knows that he has plenty of time to do thoroughly all the work he can be expected to do, and is not tempted to hurry over any part of it. All his work being finished in good time, he has a long interval of rest in the evening before the timely hour when he goes to bed. A sound night's rest rises early next morning in good health is most refreshing, and after he gets to sleep several hours before midnight, at the time when sleep and spirits for the labors of a new day.

***Questions***

1. What is the great advantage of early rising?
2. How is early morning different from other hours of the day?
ஹைட்ரோகாபன் மற்றும் சக்தித்துறை சார்ந்த பரந்தளாவான முன்முயற்சிகளிலும் ஏனைய திட்டங்களிலும்ஒத்துழைப்பைமேலும் வலுவாக்கும் நோக்குடன் இந்திய பெற்ரோலிய மற்றும் இயற்கை எரிவாயுத்துறை அமைச்சின் செயலாளர் தலைமையிலான சிரேஷ்ட பிரதிநிதிகள் குழுவினர் இலங்கைக்கான விஜயமொன்றை மேற்கொண்டுள்ளனர்.

மேற்படி பிரதிநிதிகள் குழுவிற்கும் வலுசக்தி அமைச்சர் காஞ்சன விஜேசேகர உள்ளிட்ட இலங்கைப் பிரதிநிதிகளுக்குமிடையில் வெள்ளிக்கிழமை விசேட சந்திப்பொன்று இடம்பெற்றது. இதன் போதே மேற்கூறப்பட்ட விடயங்கள் தொடர்பில் அவதானம் செலுத்தப்பட்டுள்ளது.

மேலும் இந்த சந்திப்பின் போது உயிர்ம எரிபொருள், புதுப்பிக்கத்தக்க சக்தி, பசுமை ஹைட்ரோஜன் போன்ற புதிய துறைகளில் ஒத்துழைப்பை விஸ்தரிப்பதற்கான சாத்தியங்களுக்கு அப்பால் தற்போது முன்னெடுக்கப்படும் ஆய்வுகள் இயற்கை எரிவாயு மற்றும் சக்தி மையத்தை அபிவிருத்தி செய்தல் தொடர்பாகக் கலந்தாலோசிக்கப்பட்டதாக கொழும்பிலுள்ள இந்திய உயர்ஸ்தானிகராலயம் தெரிவித்துள்ளது.

இந்த சந்திப்பில் இந்திய உயர்ஸ்தானிகர் கோபால் பாக்லே, இந்திய பெற்றோலிய கூட்டுத்தாபனம், இந்திய பொறியியலாளர்கள் நிறுவனம், ஹிந்துஸ்தான் பெற்றோலிய கூட்டுத்தாபனம், பெற்றோனெட் எல்.என்.ஜி. லிமிடெட் உள்ளிட்ட முக்கிய பிரதிநிதிகள் கலந்து கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.




## பெண்ணே துணிந்தெழு

++++++++++++++++++++++++

அன்பென்னும் அமுதம்
ஆக்கிப் போடும் அவசரத்தில்
அலுப்பை கூட பாராது
அயராது உழைக்கும்
ஆல விருட்சம்தான் பெண். ...!

அடுப்பம் கரை தொட்டு
ஆராய்ச்சி விண்வெளிவரை
அகல கால் பதித்தும் - பெண்
அடிமைத்தனத்தை அகற்ற
ஆண்மைக்கு இன்னும் ஏன்
அவகாசம். .....!

மேடை போட்டு - பெண்ணை
மெருகேத்தி பேசும் ஆண்.
பேதமின்றி வீட்டில்
பேணுவது அரிது.

காடாள கணவன் பின்
தோளோடு சென்றவள் சீதை.
ஈழ நாடான்ற எம் தலைவனுக்கு
உயிர் கொடுத்த வீராங்கனைகள்
ஈழத்து எம் பெண்மைகள்.

போர்க்கொடுமை பரவ
பெரும் சுமை ஏறியது
வறுமையோடு வஞ்சகமும்
வாட்டி புரட்டியும்
நெஞ்சுரந்து நிற்கிறது
நேர்மையோடு ஈழத்து பெண்மை.

இதிகாச புராணம் தொட்டு
தற்போதைய தொழில்நுட்பம் வரை
தன்நிகரில்லா பங்கு - பெண்ணால்
தரணியிலே தனித்திருக்க - ஆணே....!
நீ தரம் பார்த்து கொள்வதேன்.

பெண்மையை போற்றுவோம்
ஆண்பெண் பேதமை ஒளிப்போம்
நன்மையை பெருக்குவோம்
நாம் ஒன்றாக வாழுவோம்
நன்றாக நலமாவோம்.

**- றொபின்சியா பிரான்ஸ் -**

# இலங்கையில் இன்னமும் 63 லட்சம் மக்கள் உணவு பாதுகாப்பின்மைக்கு ஆளாகினர்

## செஞ்சிலுவை செம்பிறைச்சங்கங்களின் சர்வதேச சம்மேளனம் தகவல்

இலங்கையில் 63 லட்சம் மக்கள் இன்னமும் ஓரளவு அல்லது மோசமான உணவுப்பாதுகாப்பின்மையை எதிர்கொள்கின்றனர் என செஞ்சிலுவைசெம்பிறைச்சங்கங்களின் சர்வதேச சம்மேளனம் தெரிவித்துள்ளது.

போதுமான வாழ்வாதார உதவிகள்மற்றும்வாழ்வாதார உதவிகள் வழங்கப்படாவிட்டால் தற்போதைய நிலை 2023 இல் மோசமடையும் எனவும் செஞ்சிலுவை செம்பிறைச்சங்கங்களின் சர்வதேசசம்மேளனம்தெரிவித்துள்ளது.

பொருளாதாரநெருக்கடியின் தாக்கம் தொடர்ந்தும் உயர்வாக காணப்படுகின்றது இந்தநெருக்கடிதற்போதைக்கு முடிவிற்கு வரப்போவதில்லை என்பதை பல ஆய்வுகள் தெரிவித்துள்ளன எனவும் செஞ்சிலுவை செம்பிறைச் சங்கங்களின் சர்வதேச சம்மேளனம் தெரிவித்துள்ளது.

எனினும் இது நீடிக்கலாம் மக்களின் நிலைமை படிப்படியாக மோசமடையும் எனவும் செஞ்சிலுவை செம்பிறைச் சங்கங்களின் சர்வதேசசம்மேளனம் தெரிவித்துள்ளது.

# கட்டாரில் கட்டடம் இடிந்து விழுந்து இலங்கையர் சாவு

கட்டார் தலைநகர் தோஹாவில் புதன் கிழமை கட்டடம் இடிந்து விழுந்ததில் இலங்கை பிரஜை ஒருவர் உயிரிழந்துள்ளார் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

கட்டாரின் உள்துறை அமைச்சகத்தின் கூற்றுப்படி, தோஹாவின் பின் டர்ஹாம் சுற்றுப்புறத்தில் நான்கு மாடி கட்டடம் இருந் துள்ளது.

இந்நிலையில், இந்த சம்பவத்தில் ஒன்பது பேர் உயிர்தப்பியுள்ளதோடு, உயிரிழந்த நபர் கட்டடம் இடிந்து விழுந்தபோது கட்டடத்துக்குள் இருந்துள்ளார்.

உயிரிழந்த இலங்கையர் 56 வயதுடையவர் எனவும் அவரது மகனால் அடையாளம் காணப்பட்டுள்ளார் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் 60 வயதுடைய நபர் காணாமல் போயுள்ளார் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளதுடன், இது தொடர்பில் கட்டாரில் பணிபுரியும் அவரது மகனால் கட்டாரில் உள்ள இலங்கை தூதரகத்துக்கு தகவல் வழங்கப்பட்டுள்ளது.

சம்பவம் தொடர்பில் கட்டாரில் உள்ள இலங்கை தூதரகம் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அலுவலகம் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றன.

இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 26.03.2023இல் வெளியிடப்பெற்றது.

**நேற்றைய மாலைப்பதிப்பு பக்கங்களும் இணைக்கப்பட்டுள்ளன.**

பக்கங்கள்: 05

# காலைக்கதிர்

Kālaikkathir

மாலைப்பதிப்பு

சாயல் 04 | வள்ளுவர் ஆண்டு 2054 | பங்குனி 11 | சனிக்கிழமை | 25.03.2023 | கதிர் 08

## புத்தாண்டை முன்னிட்டு 10 இற்கு முன் சம்பளம்!



தமிழ் -சிங்கள புத்தாண்டை முன்னிட்டு சமுர்த்திக் கொடுப்பனவு, அரச ஊழியர்களுக்கான சம்பளம் மற்றும் ஓய்வூதியம் என்பன ஏப்ரல் 10ஆம் திகதிக்கு முன்னர் வழங்கப்படும் என்று நிதி இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலாப்பிட்டிய தெரிவித்தார்.

ருவான்வெல்ல பகுதியில் வைத்து இன்று ஊடகங்களிடம் கருத்து வெளியிட்ட போது அவர் இதனைக் 2

## ரவீந்திரநாத் கடத்திக் கொலை பிள்ளையானுக்குத் தொடர்பு!

### மட்டு. மாவட்ட முன்னாள் காணி ஆணையாளர் குற்றச்சாட்டு

கிழக்கு பல்கலைக்கழகத்தின் முன்னாள் உபவேந்தர் ரவீந்திரநாத் கடத்தப்பட்டு படுகொலை செய்யப்பட்டமைக்கும் மட்டக்களப்பில் தற்போது இராஜாங்க அமைச்சராக இருப்பவருக்கும் இடையில் தொடர்பிருந்ததாக மட்டக்களப்பு மாவட்டத்தின் முன்னாள் காணி ஆணையாளர் நே.விமல்ராஜ் குற்றஞ்சாட்டினார்.

கிழக்கு பல்கலைக்கழகத்தின் மாணவர் ஒன்றியத் தலைவராக தான் இருந்த போதே முன்னாள் உபவேந்தர் கடத்தப்பட்டு கொலை செய்யப்பட்டதாகவும், அக்காலத்தில் தற்போது மட்டக்களப்பில் இராஜாங்க அமைச்சராகயிருந்தவர் தொடர்புபட்டது குறித்து பல்கலைக்கழகத்தில் பேசப்பட்டதாகவும் அவர் கூறினார்.

மட்டக்களப்பு ஊடக அமையத்தில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

சட்டத்துக்கு முரணான வகையில் காணி கோரி என் மீது அழுத்தங்கள் பிரயோகிக்கப்பட்டன. அதனைக் கவனத்தில் கொள்ளாத நிலையிலேயே என்னைப் பழிவாங்கும் செயற்பாடுகளை குறித்த இராஜாங்க முன்னெடுத்துள்ளார்.

தனது மாவட்ட அபிவிருத்திக் குழுத் தலைவர் என்னும் பதவியைப் பயன்படுத்தி தவறான செயற்பாடுகளையும் அரச அதிகாரிகளை அச்சுறுத்தும் செயற்பாடுகளையுமே அவர் முன்னெடுத்து வருகின்றார். நாடாளுமன்ற உறுப்பினர் சாணக்கியன் விசேட தேவையுடையவர்களின் தொழில் மேம்பாட்டுக்காக உரிய சட்டதிட்டங்களுக்கு அமைய காணியைப் பெற்று தொழில் முயற்சியை முன்னெடுத்த நிலையில் குறித்த காணியை அவருக்கு வழங்க வேண்டாம் எனவும், குறித்த காணியை மீளப்பெறுமாறும் எனக்கு இராஜாங்க அமைச்சர் சந்திரகாந்தன் (பிள்ளையான்) அழுத்தங்களை வழங்கினார் – என்றார்.

# ஜனாதிபதித் தேர்தலுக்கு இப்போதே தயாராகுங்கள்

## அரசின் முக்கியஸ்தர்களுக்கு ரணில் பணிப்பு



2024ஆண்டுஆரம்பத்தில் ஜனாதிபதித் தேர்தலை நடத்துவதற்கு அரசு திட்டமிட்டிருப்பதால் அதற்கு முன் எந்தத் தேர்தலையும் நடத்துவதில்லை என்று ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தீர்மானித்துள்ளார் என அரச உயர்மட்டம் தெரிவிக்கின்றது. இந்தத் தேர்தலுக்காக இப்போதே தயாராகுமாறு அரசின் முக்கியஸ்தர்களுக்கு ஜனாதிபதி அறிவித்துள்ளார் என்று அந்தத் தகவல் கூறுகின்றது.

சர்வதேச நாணய நிதியத்தின் பணத்தைப் பெற்று ஓரளவாவது பொருளாதாரப் பிரச்சினையைத் தீர்த்துவிட்டு ஜனாதிபதித் தேர்தலுக்குச் சென்றால்அதில்தான்வென்று விடலாம் என்று ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க ஏற்கனவே நம்பியிருந்தார். 2

## தேர்தல் குறித்து அடுத்தகட்டம் என்ன? மீண்டும் கூடுகின்றது ஆணைக்குழு



உள்ளூராட்சி சபைத் தேர்தல் குறித்து அடுத்தகட்ட தீர்மானங்களை மேற்கொள்வதற்காகத் தேர்தல்கள் ஆணைக்குழு அடுத்த வாரம் மீளவும் கூடவுள்ளது.

ஏப்ரல் 25ஆம் திகதி, தேர்தலை நடத்துவதில் உள்ள தடைகள் குறித்து இதன்போது கலந்துரையாடப்படவுள்ளது என்று தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் நிமல் புஞ்சிஹேவா ஊடகங்களிடம் இன்று தெரிவித்துள்ளார்.

இதேவேளை, உள்ளூராட்சி சபைத் தேர்தலுக்கான எந்தவொரு வாக்குச்சீட்டும் அரச அச்சுத் திணைக்களத்திடமிருந்து இதுவரையில் தமக்குக் கிடைக்கவில்லை என்றும் அவர் மேலும் கூறியுள்ளார்.

## தேர்தலுக்கு அஞ்சுவோர் நாட்டை எப்படிக் கட்டியெழுப்புவார்கள்?

### எதிர்க்கட்சித் தலைவர் சஜித் கேள்வி

நாட்டை ஆட்சி செய்யும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான அரச தரப்பினர் தேர்தலை நடத்தினால் தாம் படுதோல்வி அடைவோம் என்று தெரிந்தே தேர்தலை ஒத்திவைத்திக் வைத் துக் கொண்டிருக்கின்றனர். இந்தக் கோழைத்தனமான அரச தரப்பினர், முதுகெலும்பில்லாத தலைமையினர், தேர்தலுக்கு முகம் கொடுக்க அஞ்சும் அணியினர் எவ்வாறு நாட்டைக் கட்டியெழுப்பப் போகின்றார்கள்?

இவ்வாறு கேள்வி எழுப்பினார் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ.

பொரளைகுப்பியவத்தையில் நடைபெற்ற மக்கள் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

ரணில்தலைமையிலான யானை – காகம் – மொட்டு அரச தரப்பினர் தேர்தலைநடத்தாதிருப்பதற்குப் பாரிய சதித்திட்டங்களை முன்னெடுத்துள்ளனர். தேர்தலுக்குஒதுக்கப்படும் பணத்தை வழங்காமல், நீதிபதிகளை விமர்சனம் செய்தும், அவர்களைக் குறைமதிப்புச் செய்தும் மிரட்ட முயற்சிக்கின்றனர்.



நாட்டு மக்கள் பட்டினி யால் வீதியில் இறங்கும் போது அரச மிருகத்தனத்தையும் பயங்கரவாதத்தையும் பிரயோகிப்பதை 2

## கல்வி மேற்பார்வைக் குழுவின் தலைவராக இராதாகிருஷ்ணன்



கல்வி பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவின் தலைவராக நாடாளுமன்றஉறுப்பினர் வேலுசாமி இராதாகிருஷ்ணன் நாடாளுமன்றத்தில் தெரிவு செய்யப்பட்டார்.

நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் அவரது பெயரை முன்மொழிந்ததுடன், நாடாளுமன்றஉறுப்பினர் ரோஹிணி குமாரி விஜேரத்ன அதனை வழிமொழிந்தார்.

இதன்போது நாடாளுமன்ற உறுப்பினர் இராதாகிருஷ்ணன் கருத்துத் தெரிவிக்கையில், 2

## பறிபோகிறது நாவலர் மண்டபம்

### அதை கொழும்புக்கு தாரைவார்க்க ஆளுநர் ஜீவன் உத்தரவு

(ந.லோகதயாளன்)

யாழ்ப்பாணம், மார்.25

யாழ்ப்பாணம் மாநகர சபையின் ஆளுகையின கீழ் உள்ள நாவலர் மண்டபத்தை உடனடியாக இந்து கலாச்சார அமைச்சிடம கையளிக்குமாறு வடக்கு மாகாண ஆளுநர் ஜீவன் தியாகராஜா மாநகர சபை ஆணையாளருக்கு உத்தரவிட்டுள்ளார்.

40 வருடங்களுக்கு மேலாக யாழ்ப்பாணம் மாநகர சபையின் ஆளுகையின் கீழ் இருந்து வருகின்றது நாவலர் கலாசார மண்டபம். 2





## தப்பிச் செல்ல ஆற்றில் குதித்த கைதி மாயம்

தப்பிச் செல்ல முற்பட்ட கைதி ஒருவர் ஆற்றில் மூழ்கிக் காணாமல்போயுள்ளார் என்று பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

கண்டி, பல்லேகல 2

## பயங்கரவாதத் தடைச் சட்டத்திற்கு எதிராக மக்கள் சக்தியை கட்டியெழுப்பும் நிகழ்வு

### அனைத்துப் பல்கலை மாணவர் ஒன்றிய ஏற்பாட்டில் யாழ். நகரில் இன்று நடந்தது

(எஸ்.நிதர்ஷன்)

அனைத்துப் பல்கலைக் கழக மாணவர் ஒன்றியத்தின் ஏற்பாட்டில் பயங்கரவாத தடைச் சட்டத்தை உடனடியாக நீக்க வேண்டுமென வலியுறுத்தி "மக்கள் சக்தியைக் கட்டியெழுப்புதல்" எனும் தொனிப் பொருளில் பொதுச் சொற்பொழிவு யாழ்ப்பாணத்தில் உள்ள றிம்பர் மண்டபத்தில் இன்று நடைபெற்றது.

இந் நிகழ்வில் கலந்து கொண்டு விசேட உரையாற்றும் போதே 2

## இலங்கைக்குத் தப்ப முயன்றவர் உள்ளிட்ட 5 பேர் அதிரடிக் கைது

### தமிழ்நாட்டுப் படையினர் நடவடிக்கை

(ந.லோகதயாளன்)

யாழ்ப்பாணம், மார்.25

இந்தியாவில் இருந்து இலங்கைக்கு படகில் தப்பிச் செல்ல முயன்றவரையும் அவரை ஏற்றிச் செல்ல உதவியோர் என ஐவரையும் தமிழ்நாடு பொலஸார் கைது செய்தனர்.

தமிழ்நாட்டில் தங்கியிருந்த யாழ்ப்பாணம் கரணவாய்ப பகுதியைச் சேர்ந்த மனோகரன் ஜெனகன் (வயது 39) இந்தியக் கடலில் உள்ள மணல் திட்டு ஒன்றில் கைது செய்யப்பட்டார். இலங்கைக்கு தப்பிச் செல்லும் நோக்கில் இராமேஸ்வரத்தில் இருந்து படகில் பயணித்த அவர் 5 ஆவது தீடையில் இறக்கி விடப்பட்டிருந்த சமயம் கரையோரக் காவல் படையினரால் கைது செய்யப்பட்டார். அவர் இறக்கி விடப்பட்ட 2

## கச்சதீவு புத்தர் சிலையை உடனே அகற்றவேண்டும்

### வசந்தன் அடிகளார் கோரிக்கை



இரண்டு நாடுகளின் அடையாள சின்னமாக விளங்கும் கச்சதீவு பகுதியிலுள்ள புத்தர் சிலைகள் அகற்றப்பட வேண்டும் என்று கச்சதீவு யாத்திரை தல பரிபாலகர் வசந்தன் அடிகளார் கோரிக்கை விடுத்தார். கச்சதீவில் பௌத்த சின்னங்களும், புத்தர் சிலைகளும் வைக்கப்பட்டமை தொடர்பான 2

## மதமாற்ற நோக்கோடு வந்தால் விரட்டியடிக்கப்படுவார்கள்

### சிவசேனைத் தலைவர் தெரிவிப்பு

இலங்கை 10 ஆயிரம் ஆண்டுகளாக சைவ சமயத்தைப் பேணுகின்ற பூமி. இங்கு மதமாற்றும் நோக்குடன் கிறிஸ்தவர்களோ முகமதியர்களோ அல்லது வேறு சமயத்தவர்களோ வந்தால் விரட்டியடிக்கப்படுவார்கள்.

இவ்வாறு தெரிவித்தார் இலங்கை சிவசேனை அமைப்பின் தலைவர் மறவன்புலவு சச்சிதானந்தம். 2



## இலங்கைக்கு.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ணல்திட்டு இந்தியாவின் ஆளுகைக்கு உட்ட்ட கடல்பகுதியில் உள்ளது. தமது ஆளுகையில் உள்ள மணல் திட்டில் ஒருவர் நனாடுவதனை அவதா னித்த இந்திய கரையோர காவல்படையினர் அவரை கைது செய்து இராமேஸ்வரம் பொலிஸாரிடம் ஒப்படைத்தனர்.

தமிழ்நாடு பொலிசார் மேற்கொண்ட தீவிர விசாரணையில் ஜெனகன் இலங்கைக் குத் தப்ப உதவினார்கள் என்று சொல்லப்படும் மேலும் 4 பேரும் கைகது செய்யப்பட்டனர்.

ஜெனகனின் சகோத ரரான றமணன் என்பவர் இலங்கையில் இருந்து ஓர் முகவர் மூலம் இந்திய நாணயத்தில் 60 ஆயிரம் ரூபா வழங்கி ஜனகனை இலங்கைக்குப் படகில் ஏற்றிச் செல்ல படகு ஏற்பாடு செய்-துள்ளார். இந்தியாவில் 60 ஆயிரத்தைப் பெற்றவர் உள்ளூர் நாட்டுப் படகை ஒழுங்கு செய்து பட கோட்டிகளிற்கு 3 ஆயிரம் ரூபா வழங்கியுள்ளார். பணத்தை பெற்ற படகோட்டி ஜெனகனை ஏற்றி வந்து 5ஆவது மணல் திட்டில் இறக்கிவிட்டுள்ளார்.

இலங்கையில் இருந்து வரும் ஒரு படகில் அவர் யாழ்ப்பாணத்திற்கு ஏற்றிச் செல்லப்படுவார் என்று ஜனக னிடம் தெரிவிக்கப்பட்டிருக்கிறது என்று தமிழ்நாடுப் பொலிஸார் தெரிவித்தனர்.

இதேநேரம் ஜெனகனிடம் பிரித்தானிய கடவுச் சீட்டு கை வசம் இருந்ததையும் கண்டுபிடித்துள்ள தமிழ்நாடு பொலிஸார் அது குறித்தும் தீவிர விசாரணை நடத்தி வருகின்றனர்.

## தப்பிச் செல்ல.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

றந்தவெளி சிறைச்சாலையில் இருந்து ப்பிச் செல்ல முற்பட்ட கைதியே மகாவலி ஆற்றில் மூழ்கிக் காணாமல் போயுள்ளார்.

குறித்த கைதி ஹெரோயின் வைத்தி ந்த குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்டுத் டுப்புக் காவலில் வைக்கப்பட்டிருந்த வராவார்.

கொழும்பு – 15 இல் வசிக்கும் 34 வயதுடைய நபரே தப்பிச் செல்வதற்காக மகாவலி ஆற்றில் குதித்துள்ளார்.

இந்நிலையில், பொலிஸாரும் டற்படையினரும் இணைந்து கைதியைத் தேடும் பணிகளை முன்னெடுத்து வருகின்றனர்.

## பறிபோகிறது.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அது தமது சொத்து எனவும் 1981ஆம் அதனை தற்காலிகமாக மாநகர சபையிடம் கையளித்ததாகவும் தெரிவித்து அந்த மண் டபத்தை மீண்டும் தம்மிடம் கையளிக்குமாறு இந்து கலாசார அமைச்சு கோரியது.

இது தொடர்பில் நடத்தப்பட்ட பேச்சுக்களைத் தொடர்ந்து இந்து கலாசார அமைச்சும் யாழ்ப்பாண மாநகர சபையும் இணைந்து அந்த மண்டபத்தை நிர்வகிப்பதற்கான திட்டங்கள் வி.மணிவண்ணன் யாழ். மாநகர சபை முதல்வராக இருந்த சமயத்தில் தயாரிக்கப்பட்ட.

மக்களால் தெரிவு செய்யப்பட்ட மாநகர சபை மார்ச் 19 கலைக்கப்பட்டதைத் தொடர்ந்து அது வடக்கு மாகாண ஆளுநரின் நேரடிக் கட்டுப்பாட்டின் கீழ் வந்துள்ளது. அந்த அதிகாரத்தைப் பயன்படுத்தி, எட்டப்பட்ட இணக்கங்களுக்கு மாறாக ஏப்ரல் 6ஆம் திகதிக்கு முன்னர் யாழ்ப்பாணம் மாநகர சபை நாவலர் கலாசார மண்டபத்தில் இருந்து தனது உடமைகள் அனைத்தையும் எடுத்துக்கொண்டு வெளியேற வேண்டும் என்று ஆளுநர் உத்தரவிட்டுள்ளார்.

இது தொடர்பான அவரது உத்தரவு யாழ். மாநகர சபை ஆணையாளர் இ.ஜெயசீலனுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

மக்களால் தேர்வு செய்யப்பட்ட சபை இன்மையால் ஆணையாளர் ஆளுநரின் உத்தரவை நடைமுறைப்படுத்த வேண்டிய கட்டாயத்தில் இருக்கிறார்.

## தேர்தலுக்கு.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இனி யும் பொறுத்துக்கொள்ள முடியாது. இந்த ஏகாதிபத்தியத்தைப் பார்த்துக்கொண்டும் பொறுத்துக்கொண்டும் இருக்க முடியாது.

எனவே, ஐக்கிய மக் கள் சக்தியுடன் கை கோர்த்து இந்தச் சர்வாதிகார அரச பயங்கர வாதத்தை தோற்கடிக்க வீதியில் இறங்கி ஜன நாயக ரீதியிலான அமைதிவழிப் போராட்டத்தில் ஈடு பட ஒன்றிணையுமாறு அனைவருக்கும் அழைப்பு விடுக்கின்றேன் – என்றார்.

## கல்வி.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

முன்னாள் கல்வி இராஜாங்க அமைச்சராகப் பணியாற்றியுள்ளதால் எனக்கு இத்துறை தொடர்பில் புரிதல் காணப்படுகின்றது. அதனால் இந்தக் குழு ஊடாக மேற்கொள்ள முடியுமான உயர்ந்த சேவையை மேற்கொள்ள நான் எதிர்பார்த்துள்ளேன். – என்றார்.

இந்தக் குழு பரந்துபட்ட ஒரு துறையைக் கொண்டுள்ளதால் உயர்கல்வி மற்றும் ஆய்வு பற்றிய உப குழு மற்றும் திறன் விருத்தி மற்றும் தொழிற் பயிற்சி பற்றிய உப குழு ஆகிய இரண்டு உப குழுக்களை நியமிக்க இதன்போது நடவடிக்கை எடுக்கப்பட்டது.

இந்தக் கூட்டத்தில் நாடாளுமன்ற உறுப்பினர்களான விமலவீர திஸாநாயக்க, சஞ்சீவ எதிரிமான்ன, குலசிங்கம் திலீபன், அசங்க நவரத்ன, முதிதா பிரசாந்தி சொய்சா, மாயாதுன்ன சிந்தக அமல், மஞ்சுளா திஸாநாயக்க மற்றும் பேராசிரியர் சரித ஹேரத் ஆகியோர் கலந்துகொண்டனர்.

நாடாளுமன்ற உதவிச் செயலாளர் நாயகம் டிகிரி கே. ஜயதிலக்கவும் இதன்போது கலந்துகொண்டார்.

## புத்தாண்டை.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கூறினார். ஜனாதிபதியின் ஆலோசனைக்கு அமைய, இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது என்றும் அவர் மேலும் குறிப்பிட்டார்.

## ஜனாதிபதி.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இந்நிலையில், சர்வதேச நாணய நிதியத்தின் பணம் உறுதியாகியுள்ளது. முதலாம் தவணைப் பணமும் கிடைத்துள்ளது. பொருட்களின் விலைகளும் படிப்படியாகக் குறைய ஆரம்பித்துள்ளன. இதனைச் சாதகமாகப் பயன்படுத்தி எதிர்வரும் 2024 ஆண்டு ஆரம்பத்தில் ஜனாதிபதித் தேர்தலை நடத்தி அதில் தான் வென்று காட்ட ரணில் திட்டம் வகுத்துள்ளார்.

ஜனாதிபதித் தேர்தலில் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் ஆதரவுடன் பொதுவேட்பாளராகக் களமிறங்குவதே ரணிலின் தீர்மானமாக உள்ளது என்றும் அரச உயர்மட்டம் மேலும் தெரிவிக்கின்றது.

## அனைத்து.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வசந்த முதலிகே மேற்கண்டவாறு தெரிவித்தார். அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:

நாட்டில் பயங்கரவாத தடைச் சட்டம் கொண்டு வரப்பட்ட தொடக்க காலத்திலிருந்து இன்று வரையில் பல நூற்றுக் கணக்கானோர் பல்வேறு பாதிப்புக்களை எதிர்நோக்கி வந்திருக்கின்றனர்.

இந்தச் சட்டத்தினால் பல நூற்றுக் கணக்கானோர் பொய்க் குற்றச் சாட்டுக்கள் சுமத்தப்பட்டு நீண்ட காலமாகச் சிறைகளில் தடுத்து வைக்கப்பட்டு இருக்கின்றனர்.

இவ்வாறு சிறைகளில் தடுத்து வைக்கப்பட்டுள்ளர்களை விடுதலை செய்யுமாறு உறவுகள் தொடர் போராட்டங்களை நடாத்தி வருகின்றனர். ஆனால் இந்த விடயங்களில் அரசியல்வாதிகள் அதீத அக்கறை எடுத்து செயற்படத் தவறி வருகின்றனர்.

எம்மில் பலரையும் கைது செய்து தடுத்து வைக்கின்ற பயங்கரவாத தடைச் சட்டத்தை நீக்க வேண்டுமெனப் பலரும் கோரிக்கை விடுத்து வருகின்றனர்.

அவ்வாறு பயங்கரவாத தடைச்சட்டத்தை நீக்கிவிட்டு அதே பெயரில் பெயரில் சிறு மாற்றங்களைச் சேர்த்து பயங்கரவாத எதிர்ப்பு தடைச் சட்டம் என்றொரு புதிய சட்டத்தை கொண்டுவர நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

அந்தப் புதிய சட்டமானது மேலும் மேலும் அடக்கு முறைகளையும் அச்சுறுத்தல் களையும் ஏற்படுத்தும். அது நாட்டிற்கும் நாட்டிலுள்ள மக்களுக்கும் பெரிதும் பாதிப்பை ஏற்படுத்தும். ஆகையினால் இதனை ஒவ்வொருவரும் உணர்ந்துகொண்டு அதற்கு எதிராக ஒன்றிணைந்து செயற்பட வேண்டும்.

குறிப்பாகப் பயங்கரவாத தடைச் சட்டத்தால் கைது செய்யப்பட்ட குட்டிமணி தங்கத்துரை போன்ற சகோதரர்கள் அன்று கூறியது இன்றுவரை தொடர்கிறது. இந்தச் சட்ட ஆபத்து தொடர்பில் அனைவரும் உணர்ந்து செயற்பட வேண்டியது மிகவும் அவசியமானது.

புதிதாக கொண்டு வரப் போகிற சட்டமும் மிகவும் ஆபத்தானது. எதிர்காலத்தில் இது மேலும் மேலும் பல்வேறு பாதிப்புக்களையே ஏற்படுத்தும். ஆகவே இதற்கு எதிராக அனைவரும் ஒன்றிணைந்து போராட வேண்டியது அவசியம்.

இதேவேளை தமிழ் மக்களுக்கு பல்வேறு பிரச்சினைகள் இருக்கின்றன. அவர்களுக்கு இருக்கிற பிரச்சினைகளில் முதற்படியாகவே இந்த கொடிய சட்டத்தை நீக்க வேண்டுமென்ற எமது போராட்டத்தைத் தொடங்கியிருக்கின்றோம்.

வடக்கு பிரச்சனையை உணரும் தெற்கு மனிதராகவும் தெற்கு பிரச்சனையை உணரும் வடக்கு மனிதராகவும் அனைவருமாக ஒன்றிணைந்து பிரச்சினைகளுக்கான தீர்வைப் பெற்றுக்கொள்ள போராட வேண்டும் – என்றார்.

## கச்சதீவு.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

புகைப்படங்கள் வெளியான நிலையில் இன்று ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவித்தபோதே அவர் இதனைக் கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

கச்சதீவு என்றாலே இந்தியத் தமிழ்நாடு மக்களுக்கும் இலங்கை தமிழ் மக்களுக்கும் ஏன் அண்மைய காலமாக சிங்கள மக்களுக்கும் ஞாபகத்துக்கு வருவது புனித அந்தோனியார் ஆலயமே.

கச்சதீவு அந்தோனியாருக்காக அர்ப்பணிக்கப்பட்ட தீவாகத் தொன்றுதொட்டு காணப்படுகின்றது. ஆனால், திட்டமிட்ட வகையில் அண்மைய நாட்களில் இரண்டு புத்த பெருமானின் சிலைகள் வைக்கப்பட்டதுடன் அரச மரக்கன்றுகளும் நாட்டப்பட்டுள்ளன.

யாருக்கும் தெரியாத வகையில் உயரமாக பனை ஓலைகளால் வேலியமைத்து புத்தர் சிலைகள் மூடப்பட்டுக் காணப்படுகின்றமையை சில நாட்களுக்கு முன்னர் பார்த்த புகைப்படங்கள் மூலம் அறியக்கிடைத்தது. எதிர்காலத்தில் வரலாற்றைத் திரிபுபடுத்து–வதற்கான முயற்சியே இது.

கச்சதீவில் புனித அந்தோனியார் ஆலயம் மட்டுமே இருக்கின்றது. அங்கு 7 தொடக்கம் 10 வரையான கடற்படையினர் கடமையாற்றுகின்றனர். அவர்கள் வழிபட சிறியதான புத்தர் சிலையை வைத்து வழிபடலாம். ஆனால், இவ்வளவு பெரிய புத்தர் சிலைகள் எதற்கு? அதை ஏன் மறைத்து வைத்திருக்கவேண்டும்?

கச்சதீவில் எந்தப் பகுதியிலும் அரச மரங்கள் இல்லை. ஆனால், திட்டமிட்ட வகையில் அரச மரங்கள் நாட்டப்பட்டுள்ளன. வடக்கு, கிழக்கு தமிழர் பகுதியில் பௌத்த திணிப்பு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுகின்றது.

போருக்குப் பின்னர் இன ஒற்றுமை பற்றி பேசப்படும்போது இவ்வாறான விடயங்கள் நிறுத்தப்படவேண்டும்.

இரண்டு நாடுகளின் அடையாளசின்னமாக விளங்கும் கச்சதீவு பகுதியிலுள்ள இவ்வாறான விடயங்கள் அகற்றப்படவேண்டும். கச்சதீவு அந்தோனியார் ஆலயத்தின் புனிதத்துக்கும் தனித்துவத்துக்கும் பாதிப்பு ஏற்படாத வகையில் புத்தர் சிலைகள் அகற்றப்பட வேண்டும் – என்றார்.

# வான் படை கௌரவத்தை இகழ்ந்தார் அதனால் கறுப்புப் பட்டியலில் சேர்ப்பு

## ஜேவிபியின் குற்றச்சாட்டுக்கு அரச தரப்பு பதில்

தேசிய பாதுகாப்பு மற்றும் விமான படையின் கௌரவம் ஆகிய–வற்றுக்கு பாதிப்பு ஏற்படும் வகையில் கருத்து தெரிவித்த காரணத்தால் ஓய்வுபெற்ற விமான படை அதிகாரி சம்பத் துய்யகொன்ன கறுப்புப் பட்டியலில் சேர்க்கப்பட்டார், இந்த விடயத்தில் எவ்வித அரசியல் தலையீடும், அரசியல் பழிவாங்களும் கிடை யாது என பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் பிரமித்த பண்டார தென்னகோன் தெரிவித்தார்.



சபாநாயகர் தலைமையில் நேற்று (வெள்ளிக்கிழமை) இடம்பெற்ற அமர்வின் போது விசேட கூற்றை முன்வைத்து மக்கள் விடுதலை முன்னணியின் தலைவர் அநுரகுமார திஸாநாயக்க தேசிய மக்கள் சக்தியின் வேட்பாளர் ஓய்வுபெற்ற எயார் வைஸ் மார்ஷல் சம்பத் துய்யகொன்ன கறுப்பு பட்டியலில் சேர்க்கப்பட்டதன் பின்னணி என்ன என்று முன்வைத்த கேள்விக்கு பதிலளிக்கையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் குறிப்பிட்டவை வருமாறு –

ஓய்வு பெற்ற இராணுவ அதிகாரிகள், விமான படை அதிகாரிகள் உட்பட முப்படை அதிகாரிகள் பதவியில் இருக்கும் போது தேர்தலில் வாக்களிப்பதை தவிர செயற்பாட்டு ரீதியிலான அரசியலில் ஈடுபட அனுமதி வழங்கப்படாது.

சேவையில் இருந்து ஓய்வுபெற்றதன் பின்னர் அவர் கள் தாராளமாக செயற்பாட்டு ரீதியிலான அரசியல் செயற்பாடுகளில் ஈடுபடலாம்.

ஓய்வுபெற்ற விமான படை அதிகாரி சம்பத் துய்யகொன்ன தேசிய மக்கள் சக்தியின் வேட்பாளர் என்பதால் அவரைக் கறுப்புப் பட்டியலில் இணைத்துள்ளதாக மக்கள் விடுதலை முன்னணியின் தலைவர் குறிப்பிடுகின்றமை அடிப்படையற்றது.

சம்பத் துய்யகொன்ன அண்மையில் கம்பஹா பகுதியில் இடம்பெற்ற அரசியல் கட்சி கூட்டத்தில் தேசிய பாதுகாப்புக்கும், விமான படையின் கௌரவத்துக்கும் பாதிப்பு ஏற்படும் வகையில் கருத்துக் களை முன்வைத்துள்ளார்.

இவர் குறிப்பிட்ட கருத்துக்கள் தொடர்பில் விமானப்படை நிர்வாக மட்டத் தில் விசேட அவதானம் செலுத்தி அவருக்கு எதிராக நடவடிக்கைகளை மேற்கொண்டு பாதுகாப்பு அமைச்சு அறிவித்துள்ளது. இதனைத் தொடர்ந்தே அவர் கறுப்பு பட்டியலில் இணைக்கப்பட்டுள்ளார். இந்த விடயத்தில் எவ்வித அரசியல் தலையீடும், அரசியல் பழிவாங்கலும் கிடையாது.

விமானப்படையின் கௌரவத்துக்கு பாதிப்பு ஏற்படுத்தும் வகையிலான கருத்துக்களைக் குறிப்பிடும் நபரை அழைத்து அவர்களின் கருத்துக்களைக் கேட்பது அவசியமற்றது. யாரை விமான முகாமிற்குள் அனுமதிக்க வேண்டும், யாருக்கு தடை விதிக்க வேண்டும் என் பதை விமானப்படை தீர்மானிக்கும். – என்றார்.

# ஐ.எம்.எஃப்.இன் கடன் உதவியை எதிர்ப்பவர்கள் நாட்டின் எதிரிகள்

## சம்பிக்க இப்படிக் கருத்து

சர்வதேச நாணய நிதியத்தின் (ஐ.எம்.எஃப்) இலங்கைக்கான கடன் உதவியை யாரும் எதிர்ப்பதாக இருந்தால் அவர்கள் நாட்டின் எதிரிகள் என எதிர்க்கட்சியின் சுயாதீன நாடாளுமன்ற உறுப்பினரான சம்பிக்க ரணவக்க தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்றத்தில் இடம்பெற்ற சர்வதேச நாணய நிதியத்தின் உடன்படிக்கை தொடர்பாக ஜனாதிபதியின் நாடாளுமன்ற உரை மீதான விவாதத்தில் உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

ஐ.எம்.எஃப்.இன் நிபந்தனை மிகவும் கடினமானவை. குறிப்பாக 2026 ஆம் ஆண்டாகும் போது எமது மொத்த உள்நாட்டு உற்பத்தியை 15.3 வரை அதிகரிக்க வேண்டும். அப்படியானால் அரசாங்கத்தின் வருமானத்தை அதிகரிக்க வேண்டி ஏற்படுகிறது.

அதற்காக அரசாங்கம் கட்டண அதிகரிப்பு களுக்கு செல்லவேண்டி ஏற்படும் என அவர் மேலும் கூறினார்.

## மதமற்ற.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இன்று அவரது இல்லத்தில் செய்தியாளர்களைச் சந்தித்த ஆவர் மேலும் தெரிவித்ததாவது:

இராவணன் ஆண்ட சிவ பூமியில் பத்தா–யிரம் ஆண்டுகளிற்கு மேலாக சைவ சமயத்தினை பின்பற்றுகின்ற மக்களின் மரபுகளை அழித்து இல்லாதொழிப்பதற்காக கடந்த 400 ஆண்டுகளாக வேறு நாடுகளிலிருந்து வருகை தருகின்றனர்.

போர்த்துக்கேயர், ஒல்லாந்தர் மற்றும் ஆங்கிலேயர் வருகைக்குப் பின்னர் தற்பொழுது, கிட்டத்தட்ட 300, 400 மதமாற்று சபைகள் சைவர்கள் மத்தியில் உலா வருகின்றன. பாம்புகள், மரங்கள், நாய்கள், எலிகள் மற்றும் வேம்புகள் என எமது மரபுகளும் உரிமைகளுமானவற்றினை சாத்தான்கள் என கூறுவதற்கு இவர்கள் யார்?

இந்த மண்ணின் மரபான சைவ சமயத்தினை அழிக்க ஒரு போதும் விட மாட்டோம்.

2019 ஆண்டு கல்முனை மற்றும் யாழ்ப்பாணத்தில் மதக் கூட்டங்களில் பேசுவதற்காக வருகை தந்த ஒருவரும் காவல்துறையினரால் தடுத்து திருப்பி அனுப்பப்பட்டுள்ளார்.

தற்பொழுது தமிழகத்தின் காரூண்யா பல்கலைக்கழகத்தின் வேந்தர் பால் தினகரன் மதமாற்றம் செய்வதற்காகக் குடும்பத்தாருடன் வந்துள்ளார்.

தூண்டிலிட்டு மீனை பிடிப்பது போன்று அவரை வைத்து மதமாற்றம் செய்யலாம் என இங்குள்ள சபைகள் கனவு காண்கின்றன அவை தகர்த்தெறியப்படும்.

சுற்றுலா, மாணவர், வணிகம் மாற்றும் தொழில் புரிதல் போன்ற காரணிகளின் அடிப்படையில் இலங்கைக்கு வெளிநாட்டவர்கள் வருகை தர முடியும். அவ்வாறு வருகை தருபவர்கள் மதமாற்றத்தில் ஈடுபடக்கூடாது என்பது இலங்கையின் எழுதப்பட்ட விதி, மீறிச் செயற்பட்டால் பயங்கரவாத தடை சட்டத்தின் மூலம் கைது செய்யப்பட முடியும்.

போரிற்கு பின்னர் கடந்த 13 ஆண்டுகாலமாக மத மாற்றச் செயற்பாடுகள் தீவிரம் பெற்றுள்ளன. உள்ளங்களை மாற்றுவதாகக் கூறி மதமாற்றுதல்களை மேற்கொள்கின்றனர்.

கடந்த பல ஆண்டுகளாக இவ்வாறான செயற்பாடுகளில் ஈடுபவர்களை தடுத்து வருவதுடன் ஏறத்தாழ 40 கூட்டங்களை நிறுத்தியுள்ளோம். மதமாற்றம் நோக்குடன் யாரும் இங்கு வருகை தர வேண்டாம்.

கிறிஸ்தவர்கள் மற்றும் முகமதியர்கள் உங்களது மதம் சார்ந்து தனிப்பட்ட வழிபாடுகளை தாராளமாக மேற்கொள்ளலாம். மாறாக சைவ சமயத்தவர்களை மதமாற்றும் நோக்கில் வருகை தந்தாலோ துண்டுப்பிரசுரங்களை விநியோகம் செய்தாலோ அல்லது கூட்டங்கள் நடத்தபட்டாலோ விரட்டியடிக்கப்படுவார்கள் – என்றார்.

# சீர்குலைக்கும் தலையீடுகளை நிறுத்துங்கள் ஜனாதிபதியிடம் சிவில் சமூகம் வலியுறுத்து

நீதிமன்றம் மற்றும் தேர்தல்கள் ஆணைக்குழுவின் சுயாதீனத்தன்மையை சீர்குலைக்கும் வகையில் அதில் தலையீடுகளை மேற்கொள்ள வேண்டாம் என சிவில் சமூக மற்றும் மனித உரிமைகள் செயற்பாட்டாளர்கள் வலியுறுத்தியுள்ளனர்.

மேலும் உள்ளூராட்சித் தேர்தல்கள் தொடர்பாக உயர்நீதிமன்றம் வழங்கிய இடைக்காலத்தடை உத்தரவுக்கு மதிப்பளிக்குமாறும் அவர்கள் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவிற்கும் அவர் தலைமையிலான அரசாங்கத்துக்கும் கூட்டாக வலியுறுத்தியுள்ளனர்.

83 சிவில் சமூக மற்றும் மனித உரிமைகள் செயற்பாட்டாளர்கள் கையெழுத்திட்டு கூட்டு அறிக்கையை வெளியிட்டுள்ள அவர்கள், நீதிமன்றக் கட்டமைப்பை அச்சுறுத்துவதற்கு ஜனாதிபதியினாலும் நாடாளுமன்ற உறுப்பினர்களாலும் மேற்கொள்ளப்படும் முயற்சிகளுக்கு அதிருப்தியும் வெளியிட்டுள்ளனர்.

நாட்டின் ஜனநாயக செயன்முறையைப் புறந்தள்ளும் வகையிலான அரசாங்கத்தின் செயற்பாட்டை வன்மையாக கண்டித்துள்ள அவர்கள், இது ஆபத்தான போக்கிலான அரசாங்கத்தின் செயற்பாட்டைக் காண்பிக்கின்றது என்றும் குறிப்பிட்டுள்ளனர்.

எனவே நாட்டின் ஜனநாயகத்தைப் பாதுகாப்பது மிகமுக்கியமான விடயம் என்றும் இவ்வாறானதொரு பின்னணியில் எவ்வித தாமதமுமின்றி தேர்தலை நடத்துமாறு அரசாங்கத்திடம் கேட்டுக்கொண்டுள்ளனர்.

## கொரோனா விரைவு சோதனைக்கு

# அதிக கட்டணம் அறவிட்டதுக்கு அபராதம் விதித்தது நீதிமன்றம்

## தனியார் வைத்தியசாலைகளுக்கு எதிராக நடவடிக்கை

டெங்கு பரிசோதனை மற்றும் முழுமையான இரத்த பரிசோதனைக்கு கட்டுப்பாட்டு கட்டணத்தை விட அதிகமாக அறிவிட்ட 08 தனியார் வைத்தியசாலைகள் மற்றும் ஆய்வுகூடங்களுக்கு 55 லட்சம் ரூபா அபராதம் விதிக்கப்பட்டுள்ளது.

புதுக்கடை, நுகேகொடை நீதிவான் நீதிமன்றங்களில் நுகர்வோர் விவகார அதிகார சபை தாக்கல் செய்த வழக்குகளிலேயே இந்த அபராதம் விதிக்கப்பட்டுள்ளது.

டெங்கு காய்ச்சலுக்கான துரித இரத்தப் பரிசோதனைக்குரிய உச்சபட்ச கட்டணம் 1200 ரூபாவாகும்.

எனினும், இதற்காக 3000 ரூபா வரை கட்டணம் அறிவிடப்பட்டுள்ளதாக நுகர்வோர் விவகார அதிகார சபை தெரிவித்துள்ளது.

முழுமையான இரத்த பரிசோதனைக்கான உச்சபட்ச கட்டணமாக 400 ரூபா அறிவிக்கப்பட்டுள்ள நிலையில், அதற்கு 1000 ரூபா வரை அறிவிடப்பட்டுள்ளமையும் கண்டறியப்பட்டுள்ளது.

# அரசமைப்புப் பேரவையில் சித்தார்த்தனை இணைக்க மறுப்பது தவறான சமிக்ஞையே

## எதிர்க்கட்சித் தலைவர் சஜித் எச்சரிக்கை

சித்தார்த்தனை அரசமைப்பு பேரவையில் இணைத்துக்கொள்ள மறுப்பது தவறான சமிக்ஞையை அனுப்பும் என எதிர்கட்சி தலைவர் சஜித் பிரேமதாஸ எச்சரிக்கை விடுத்துள்ளார்.

நாடாளுமன்றத்தில் நேற்று (வெள்ளிக் கிழமை) உரையாற்றிய போதே அவர் இவ்வாறு எச்சரிக்கை விடுத்துள்ளார்.

தர்மலிங்கம் சித்தார்த்தனை அரசமைப்பு சபையில் இணைத்துக்கொள்ளுமாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பரிந்துரை செய்துள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

அரசமைப்பு பேரவையில் தற்போது 9 உறுப்பினர்கள் மாத்திரமே உள்ளனர் எனவும்,

எனினும் அதற்கு 10 பேர் தேவை எனவும் பிரேமதாஸ சுட்டிக்காட்டியுள்ளார்.

இந்தநிலையில் தர்மலிங்கம் சித்தாத்தனை 10 ஆவது உறுப்பினராக உறுதிப்படுத்துமாறு சஜித் பிரேமதாஸ சபாநாயகரிடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

# கச்சதீவில் வைத்துள்ள புத்தர் சிலையால் இந்திய – இலங்கை உறவு விரிசல் விடும்

## சமூக ஆர்வலர்கள் எச்சரிக்கை





கச்சதீவில் கடற்படையினரால் பெரும் பௌத்த விகாரையொன்று கட்டப்பட்டு, இரகசியமான முறையில் பௌத்தமயமாக்கல் முன்னெடுக்கப்பட்டுள்ளமை தற்போது பகிரங்கப்படுத்தப்பட்டுள்ளது.

கச்சதீவு இலங்கை – இந்திய பக்தர்கள் வருடம் தோறும் ஒன்றுகூடி அந்தோனியாரை வழிபட்டுச் செல்லும் ஒரு புனித பூமியாகக் காணப்படுகின்றது.

இந்த நிலையில், தங்போது அங்கு இரகசியமாக புத்தர் சிலை வைத்து பௌத்தமயமாக்கல் தீவிரமாக இடம்பெற்று வருகின்றமை இந்திய – இலங்கை உறவில் விரிசலை ஏற்படுத்தக்கூடும் என சமூக ஆர்வலர்கள் விசனம் வெளியிட்டுள்ளனர்.

குறிப்பாக வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் பௌத்தமயமாக்கலை முன்னெடுக்கும் இலங்கை படையினர் கச்சத்தீவையும் விட்டுவைக்காது அங்கேயும்பாரியபுத்தர்சிலையொன்றை பிரதிஸ்டை செய்துள்ளனர்கள்.

இவ்வாறான நிலையில், இதுவரை காலமும் இந்திய – இலங்கை பக்தர்கள் மட்டுமே திருவிழாவில் கலந்து கொண்டிருந்த நிலையில், இந்த வருடம் புதிதாக பௌத்த பிக்குகள் குழு ஒன்றும் கச்சதீவிற்கு சென்றிருந்தைமையும் தற்போது, பலத்த சந்தேகத்தை எழுப்பியுள்ளது.

மேலும் கச்சதீவில் 5 முதல் 10 கடற்படையினரே கடமையில் இருக்கின்ற நிலையில், இவ்வாறு பிரமாண்டமாக புத்தர் சிலை கட்டியிருப்பது சமூக ஆர்வலர்கள் மத்தியில் பெரும் சலசலப்பை ஏற்படுத்தியுள்ளது.

இந்திய – இலங்கை ஒப்பந்தத்தின் அடிப்படையில் கச்சதீவில் அந்தோனியார் ஆலயம் மட்டுமே இருக்க வேண்டும் என்றும், அதனைத் தவிர நிரந்தரமான கட்டடங்கள் எவையும் அமைக்க கூடாது எனவும் ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டுள்ளது.

இவ்வாறான நிலையில், அங்கு கடற்படையினருக்கான இருப்பிடம் கூட நிலையானதாக அமைக்கப்பட்டிருக்கிறது.

ஒப்பந்த யாப்பில் குறிப்பிடப்பட்டுள்ள விடயம். ஆனால் அந்த ஒப்பந்தத்தையும் மீறி தற்போது நிரந்தரமான பௌத்தமயமாக்கலுக்கான ஒரு திட்டமாக பாரியளவில் புத்தர் சிலை ஒன்று இரகசியமான முறையில் அமைக்கப்பட்டுள்ளது.

அதுமட்டுமன்றி, அந்த புத்தர் சிலை அமைக்கப்பட்டுள்ள பகுதியை சூழ மிக உயரமான கம்பிகள் பாவித்தும் பனை ஓலை வேலி அமைத்து மிக மிக இரகசியமாக கட்டுமானப் பணிகள் நிறைவடைந்துள்ளன.

அண்மையில் நடைபெற்ற திருவிழாவின் போதும் அங்கு சென்ற கிறிஸ்தவ மதகுருமாரையோ, பக்தர்களையோ மற்றும் ஊடகவியலாளர்களையோ குறித்த இடத்திற்கு அருகில் கூட செல்ல கடற்படையினர் அனுமதி வழங்கவில்லை.

இதேவேளை, கச்சதீவு பகுதியில், கடற்கரையை சூழவும் காட்டு மரங்களே வளர்ந்திருந்தன.

ஆனால் தற்போது, கடற்படையினர் அரச மரங்களை கொண்டு வந்து அந்தப் பகுதியில் வைத்துள்ளனர் எனவும் விசனம் வெளியிடப்பட்டுள்ளது.

கச்சத்தீவு இலங்கைக் கடற்படையினரின் கட்டுப்பாட்டில் இருக்கின்றது. கச்சத்தீவை இந்தியா, இலங்கைக்கு வழங்கும் போது அந்தோனியார் ஆலயத்துடனேயே வழங்கியது.

இவ்வாறான நிலையில், இலங்கை பொருளாதார ரீதியாக அதளபாதாளத்திற்கு சென்றுகொண்டிருந்த போது, பொருளாதார வீழ்ச்சியில் இருந்து மீள்வதற்கு, சர்வதேச நாடுகள் முழுமையாக ஒத்துழைப்பு வழங்கியுள்ள போதும், இந்தியா வழங்கிய ஒத்துழைப்பை ஒருபோதும் மறுக்கவோ, மறக்கவோ முடியாது. ஆகவே இவ்வாறான சிறுமைத்தனமான செயற்பாடுகள் இலங்கை – இந்திய நல்லுறவில் பாரிய விரிசலாக உருவெடுக்கும் சந்தர்ப்பங்களும் இருப்பதாக அரசியல் ஆய்வாளர்கள் தெரிவித்துள்ளனர். கச்சத்தீவில் அந்தோனியார் ஆலயம் மாத்திரமே இவ்வளவு காலமாக இருந்தது. ஆனால் இப்போது அங்கே பெரிய புத்தர் சிலை எப்படி வந்தது என்பது விடைகாண முடியாத கேள்வியாகவுள்ளது.

இலங்கையில் இருப்பவர்களுக்கும் தமிழ்நாட்டில் இருப்பவர்களுக்கும் கச்சத்தீவு அந்தோனியார் ஆலயத்துக்கு உரிய இடமென்று தெரியும்.

இருப்பினும் வடக்கு மற்றும் கிழக்கில் பௌத்த அடையாளங்களை நிறுவிவருவதைப் போன்று கச்சதீவிலும் தற்போது பௌத்த சின்னத்தை நிறுவியுள்ளனர்.

கச்சத்தீவையும் விட்டுவைக்காத நிலைமையே தற்போது இருக்கின்றது. ஆனால் கடற்படையினர் வழிபடுவதற்காக அது வைக்கப்பட்டது என்று இனி வரும் காலங்களில் பதில் வரலாம்.

குறித்த விவகாரம் தொடர்பாக நாடாளுமன்ற உறுப்பினர் சாள்ஸ் நிர்மலநாதன் நாடாளுமன்றத்தில் கேள்வி எழுப்பியுள்ளார்.

எவ்வாறு இருப்பினும், அங்கு அமைக்கப்பட்ட பிரமாண்டமான புத்தர் சிலை எவ்வாறு கட்டப்பட்டது என்பது தொடர்பான விசாரணைகளை முன்னெடுத்து அதனை நிறுவியவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் எனவும் சமூக ஆர்வலர்களும் மத தலைவர்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.

# சதி செய்கின்றன எதிர்க்கட்சிகள்!

## பாலித குற்றச்சாட்டு



பிரச்சினைகள் அற்ற நாடாக இலங்கை கட்டியெழுப்பப்பட்டுக் கொண்டிருக்கும் இந்த சந்தர்ப்பத்தில், வெளிநாட்டு தூதுவர்கள் ஊடாக அதனை முறியடிப்பதற்கு எதிர்க்கட்சிகள் சதித்திட்டம் தீட்டுகின்றன.

நாட்டை நேசிப்பதாகக் கூறுபவர்களாலேயே இவ்வாறான மோசமான நடவடிக்கைகள் முன்னெடுப்படுகின்றன என ஐக்கிய தேசிய கட்சியின் பொதுச் செயலாளர் பாலித ரங்கே பண்டார தெரிவித்தார்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் பிறந்தி தினத்தை முன்னிட்டு நேற்று(வெள்ளிக்கிழமை) ஐ.தே.க. தலைமையகமான சிறிகொத்தாவில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த நிகழ்வில் உரையாற்றும் போது இதனைத் தெரிவித்த அவர் மேலும் குறிப்பிடுகையில் –

கடந்த 9 மாதங்களுக்கு முன்னர் உயிரிழந்த நாடாகக் காணப்பட்ட இலங்கையை மீண்டும் உயிர்ப்பித்தவர் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க ஆவார்.

இந்த சவாலை ஏற்பதற்கு அனைவரும் அஞ்சி ஓடிய போது , தனியொரு நபராக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க போராடி வெற்றி பெற்றுள்ளார்.

ஐ.தே.க. பொதுச் செயலாளராக தேசிய பட்டியல் நாடாளுமன்ற உறுப்பினராக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை நியமிப்பதற்கு கையெழுத்திடுவதற்கு எனக்கு சந்தர்ப்பம் கிடைக்கப் பெற்றமையை பாக்கியமாகக் கருதுகின்றேன். அவரால் நாட்டு மக்களுக்கு நிம்மதியாக சுவாசிக்கக் கூடிய சூழல் ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டுள்ளது.

அத்தியாவசிய உணவுப் பொருள்கள் , உரம் உள்ளிட்டவற்றின் விலைகள் பெருமளவில் குறைக்கப்பட்டுள்ளன. இவ்வாறு பிரச்சினைகள் அற்ற நாட்டைக் கட்டியெழுப்பிக் கொண்டிருக்கும் போது எதிர்க்கட்சிகள் வெளிநாட்டு தூதுவர்களை அவசரமாக சந்தித்து அந்த முயற்சிகளை முறியடிப்பதற்கு சதித்திட்டம் தீட்டுகின்றன. சர்வதேச நாணய நிதியத்தின் கடனுதவியை காலம் தாழ்த்துமாறும், மேலும் கடுமையான நிபந்தனைகளை முன்வைக்க வலியுறுத்துமாறும் தூதுவர்களிடம் கோரியுள்ளன. நாட்டை நேசிப்பதாகக் கூறுபவர்களே இவ்வாறு செயற்படுகின்றனர். –என்றார்.




# வவுனியா கொமர்ல் வங்கியில் மகளிர் தின நிகழ்வு சிறப்பிப்பு

கொமர்ல் வங்கியின் வவுனியா கிளையினால் மகளிர் தினத்தைக் கௌரவிக்கும் முகமாக மகளிர் தின நிகழ்வு மார்ச் 8 அன்று வவுனியா கிளையில் கிளை முகாமையாளர் யோகச்சந்திரா தலைமையில் மிகச் சிறப்பாக நடைபெற்றது. மேற் படி சிறப்பு நிகழ்வில் சிறப்பு அதிதிகளாக வைட் ஸ்டோன் பிரை. லிமிட்டெட் மற்றும் சின்போன் பிரை. லிட். நிறுவனங்களின் நிறைவேற்று அதிகாரி கோகிலா தேவி அசோக்குமார் மற்றும் ஒமேகா லைன் ஆடைத் தொழிலக நிறைவேற்று அலுவலர் லோகநாதன் டிலானி ஆகியோர் கலந்து சிறப்பித்தனர். கடந்த மூன்று வருடங்களாக இந்த வங்கிக் கிளையில் தொடர்ந்து இந்த நிகழ்வு இடம்பெற்று வருகின்றது.

# உணவு, வாழ்வாதார பாதுகாப்பிற்கு ஐ.நா. இலங்கைக்கு ஒத்துழைப்பு

உணவு மற்றும் வாழ்வாதார பாதுகாப்பு , மீள் புதுப்பிக்கத்தக்க வலுசக்தி வேலைத் திட்டங்களுக்காக ஐக்கிய நாடுகள் அபிவிருத்தி செயற்திட்டம் ஒத்துழைப்பை வழங்கவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஐ.நா. அபிவிருத்தி செயற்திட்டத்தின் இலங்கைக்கான வதிவிடப்பிரதிநிதி அசுஸா குபோடா அலரிமாளிகையில் பிரதமர் தினேஷ் குணவர்தனவை சந்தித்து சர்வதேச ஒத்துழைப்புக்கள் தொடர்பில் கருத்துக்களைப் பரிமாறிக் கொண்டார். இதன்போதே இந்த விடயம் தொடர்பில் அவதானம் செலுத்தப்பட்டுள்ளது.

சமூக ரீதியான பொருளாதார ஸ்திரத்தன்மை, பசுமை மேம்பாடு , பங்கேற்பு நிர்வாகம் , நீதி, அமைதி மற்றும் சமூக ஒற்றுமை என்ற பிரதான துறைகளின் கீழ் திட்டமிடப்பட்டுள்ள புதிய வேலைத்திட்டங்கள் 2023 – 2027 இற்கு இடைப்பட்ட கால வரையறைக்குள் நடைமுறைப்படுத்தப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

ஜப்பான் அரசாங்கத்தின் ஒத்துழைப்புடன் ஐ.நா. அபிவிருத்தி செயற்திட்டத்தால் உணவு , வாழ்வாதார பாதுகாப்பு , பசுமை தொழிநுட்பம் மற்றும் மீள்புதுப்பிக்கத்தக்க வலு சக்தி தொடர்பான இரு வேலைத்திட்டங்களை இலங்கையில் நடைமுறைப்படுத்துவதற்கு எதிர்பார்க்கப்பட்டுள்ளதாக இதன் போது தெரிவிக்கப்பட்டது.

இவ்வாறான ஒத்துழைப்புக்களுக்கு பிரதமர் தினேஷ் குணவர்தன நன்றி தெரிவித்தார். நாட்டின் பல்வேறு பகுதிகளில் ஏற்பட்ட மண்சரிவு காரணமாக 26 ஆயிரம் வீடுகள் சேதமடைந்துள்ளள எனப் பிரதமர் இதன் போது சுட்க்காட்டினார். அனர்த்த முகாமைத்துவ அமைச்சால் ஏற்கனவே 3 ஆயிரம் வீடுகள் நிர்மாணிக்கப்பட்டுள்ளன.

எனினும் எஞ்சியுள்ள 23 ஆயிரம் வீடுகளை நிர்மாணித்து அவற்றை பாதிக்கப்பட்ட மக்களுக்கு வழங்க வேண்டியுள்ளது.

அதற்கமைய நாட்டில் மண்சரிவு அபாயம் உள்ள பகுதிகளில் மண் பாதுகாப்புத் திட்டங்கள் மற்றும் வீட்டுத் திட்டங்களைச் செயல்படுத்துவது தொடர்பாகப் பரிசீலிக்குமாறு பிரதமர் கேட்டுக் கொண்டார்.

கிராமிய சமூக அடிப்படையிலான நிறுவனங்களில் சிறு மற்றும் நடுத்தர அளவிலான தொழில் முயற்சிகளை மேம்படுத்துவதற்கு ஆதரவை அதிகரிக்குமாறும் பிரதமர் கோரிக்கை விடுத்தார்.

இலங்கையில் இரண்டு பாரிய திட்டங்களை நடைமுறைப்படுத்த எதிர்பார்த்துள்ளமைக்கமைய , அதன் கீழ் மேற்கூறப்பட்ட விடயங்கள் தொடர்பில் அவதானம் செலுத்தவுள்ளதாக வதிவிடப்பிரதிநிதி தெரிவித்தமை குறிப்பிடத்தக்கது.

காலைக்கதிர் Kalaikkathir மாலைப்பதிப்பு



# சிறப்பு தள்ளுபடியில் பிரான்ஸில் பொருள்களைத் திணிக்கத் தடை

## வந்தது புதிய சட்டம்




(பாரிஸிலிருந்து குமாரதாஸ்)

ஒன்று எடுத்தால் இரண்டு இலவசம் என்று கூறி சில பொருள்களைத் தேவைக்கு அதிகமாக நுகர்வோரது தலையில் கட்டிவிடும் வியாபாரத்தந்திரங்களுக்கு பிரான்ஸில் கட்டுப்பாடு வருகிறது.

பெரிய பல்பொருள் அங்காடிகளில் சுப்பர் புரோமோசன் (super promotions) 70%, 1+1 = 3 உருப்படிகள் என்று குறிப்பிட்டு சலவை இயந்திரச் சவர்க்காரங்கள் முதல் பற்பசைகள், சம்பூக்கள் வரை பல்வேறு பொருள்கள் அமோகமாக விற்பனை செய்யப்படுகின்றன.

வாடிக்கையாளர்களை வியப்பில் அதிர்ச்சியடையச் செய்து தங்கள் வருமானத்தையும் தேவையையும் மீறிய நுகர்வுக்குத் தூண்டும் விதமான இந்தச் சலுகை வியாபாரத் தந்திர முறையைக் குறைக்கின்ற சட்டமூலம் ஒன்று பிரான்ஸின் சட்ட மன்றத்தில் நிறைவேற்றப்பட்டிருக்கிறது.

இனிமேல் கடைகளில் சுகாதாரம் - அழகு, வாசனைத் திரவியங்கள், சுத்திகரிப்பு - பராமரிப்புச் சார்ந்த பொருள்களை (tous les produits de l'hygine‡beaut, de parfumerie et d'entre-tien) அள்ளு கொள்ளையாக விற்பனை செய்வது 34% வீதமாகக் குறைக்கப்படுகிறது.

சவர்க்காரம், பற்பசை, கழிப்பறைக் கடதாசி, முகப்பூச்சுகள், சம்பூ, ,சலவை இயந்திரத்துக்கான திரவ சவர்க்காரம் போன்ற சில பொருள்களது பாவனை அபரிமிதமாக அதிகரித்தமைக்கு வணிக நிறுவனங்களது இத்தகைய வியாபார உத்திகள் மூலமான நுகர்வுத் தூண்டுதலே காரணம் என்று சொல்லப்படுகிறது.

இவைபோன்ற கவர்ச்சிகரமான விற்பனை உத்திகள் தங்களுக்கு மிக அவசியமான உணவுப் பொருள்களில் இருந்து நுகர்வோரது கவனத்தைத் திசைதிருப்புகின்றன என்று ஆய்வுகள் சுட்டிக்காட்டுகின்றன.

தேவைக்கு அதிகமாகப் பொருள்களை முண்டியடித்து வாங்கத் தூண்டி அவர்களை நிதி நெருக்கடியில் தள்ளுகின்றன இத்தகைய வியாபார உத்திகள். அதேசமயம் பொருள்களின் பெறுமானத்தையும் குறைத்துவிடுகின்றன - என்று நுகர்வோர் நலன் சார்ந்த துறையினர் சுட்டிக்காட்டுகின்றனர்.

மிகப் பெரிய பல்பொருள் அங்காடி வலையமைப்புகள் இந்தப் புதிய சட்டத்துக்கு எதிர்ப்புத் தெரிவித்து வந்தன. பணவீக்கம் அதிகரித்துவரும் நிலையில் இந்தச் சட்டம் நுகர்வோரையும் பாதிக்கும் என்று கருத்துக்கள் எழுந்தன.

எனினும் சட்ட மூலம் நாடாளுமன்றத்தில் பெரும்பான்மை வாக்குகளால் நிறைவேறியிருக்கிறது. ஆயினும் புதிய சட்டம் ஒரு வருடம் கழித்து அடுத்த ஆண்டு மார்ச் மாதத்தில் இருந்தே நடைமுறைக்கு வரும்.

# பிரிட்டிஷ் மன்னர் சார்ள்ஸின் பாரிஸ் பயணம் ஒத்திவைப்பு



மன்னர் மூன்றாவது சார்ள்ஸ் பிரான்ஸில் மூன்று தினங்கள் மேற்கொள்ளவிருந்த பயணம் ஒத்திவைக்கப்பட்டிருப்பதாக அறிவிக்கப்பட்டிருக்கிறது. எலிஸே மாளிகை இந்தத் தகவலை வெள்ளிக்கிழமை அறிவித்திருக்கிறது. அதேசமயம் அதிபர் மக்ரோனின் வேண்டுகோளின் பேரில் மன்னரது பாரிஸ் பயணம் ஒத்திவைக்கப்படுவதாக பிரிட்டிஷ் பிரதமரது டவுணிங் வீதி அலுவலகமும் தெரிவித்துள்ளது.

ஓய்வூதியத் திருத்தச் சட்டத்துக்கு எதிரான ஆர்ப்பாட்டங்களால் நாடு முழுவதும் பெரும் கொந்தளிப்பான நிலை உருவாகி இருப்பதை அடுத்தே பாதுகாப்புக் காரணங்களுக்காக மன்னரது வருகை ஒத்திவைக்கப்படுகிறது. மன்னரது பயணம் கோடை விடுமுறைக் காலத்தின் தொடக்கத்தில் இடம்பெறும் என்றும் அரசுத் தலைவர் மக்ரோன் பின்னர் செய்தியாளர்களிடம் தெரிவித்தார்.

அரசுத் தலைவர் எமானுவல் மக்ரோன் வெள்ளிக்கிழமை காலை பக்கிங்காம் அரண்மனையுடன் தொடர்பு கொண்டு மன்னர் சார்ள்ஸுடன் பேசினார் என்று எலிஸே மாளிகை தெரிவித்துள்ளது. அதன் பின்னரே மன்னரது பயணம் ஒத்திவைக்கப்படுவது பற்றிய அறிவிப்பு வெளியானது..

முன்னர் திட்டமிட்ட படி சார்ள்ஸும் ராணி கமீலாவும் மார்ச் 26 பாரிஸ் வருகைதர இருந்தனர். அவர்களைப் பிரதமர் எலிசபெத் போர்ன் ஓர்லி விமான நிலையத்தில் வரவேற்பார் என்று அறிவிக்கப்பட்டிருந்தது. பாரிஸில் வெற்றி வளைவு (Arc de Triomphe) மாவீரர் நினைவிடத்தில் மன்னரும் ராணியும் அதிபர் மக்ரோனுடன் இணைந்து மலரஞ்சலி செலுத்த இருந்தனர். அதன் பின்னர் மன்னர் செனற் சபையில் உரையாற்றுவதற்கும் .அதிபர் மக்ரோன் வேர்சாய் அரண்மனையில் (Palace of Versailles) அளிக்கவுள்ள விசேட இரவு விருந்துபசாரத்தில் அரச தம்பதியர் கலந்து கொள்வதற்கும் திட்டமிடப்பட்டிருந்தது.

அவர்கள் பின்னர் பாரிஸில் இருந்து எதிர்வரும் செவ்வாய்க்கிழமை நாட்டின் தென் மேற்கு நகரமாகிய போர்தோவுக்குச் (Bor-deaux) செல்லவிருந்தனர். அங்கு பிரபல பிரெஞ்சு வைன் தோட்டம் (organic vineyard) ஒன்றைப் பார்வையிட இருந்தனர். ஆனால் வியாழக்கிழமை நடந்த ஆர்ப்பாட்டங்களின் போது போர்தோ நகரில் பெரும் பதற்ற நிலை உருவாக்கியிருந்தது. அங்குள்ள நகர மண்டபத்தின் வாயில் கதவு தீக்கிரையாக்கப்பட்டிருந்தது.

இளவரசர் சார்ள்ஸ் தனது தாயாரது மறைவை அடுத்து மன்னராக அறிவிக்கப்பட்ட பிறகு அவர் மேற்கொள்ளவிருந்த முதலாவது வெளிநாட்டுப் பயணம் இதுவாகும். அவர் பாரிஸில் இருந்து பின்னர் ஜேர்மனி செல்ல இருந்தார்.

மாட்சிமைதங்கிய மன்னர் மற்றும் ராணியார் ஆகியோரை ஆர்ப்பாட்டங்களுக்கு நடுவே அழைப்பதற்கு நாங்கள் ஒன்றும் அக்கறையோ அல்லது பொதுவான அறிவோ அற்றவர்கள் அல்லர் என்று நினைக்கிறேன். என்று மக்ரோன் செய்தியாளர்களிடம் தெரிவித்தார்.

# கடந்த 100 ஆண்டுகளில் இல்லாத மாற்றம் வரும்

## சீன அதிபரின் கருத்தால் பரபரப்பு



100 ஆண்டுகளில் இல்லாத மாற்றம் வரும் என்று சீன அதிபர் ஜி ஜின்பிங் புதினிடம் கூறிய வீடியோ சமூக வலைதளங்களில் வைரலாகி வருகின்றது.

சீன அதிபர் ஜி ஜின்பிங், 3 நாட்கள் பயணமாக இந்த வாரம் ரஷ்யா வந்திருந்தார். இந்த சந்திப்பில் இரு நாடுகளின் பரஸ்பர உறவுகள் குறித்து இரு நாட்டுத் தலைவர்களும் ஆலோசனை நடத்தினர்.

இந்த ஆலோசனையில் உக்ரைன் உடனான ரஷ்யாவின் போர் விவகாரம் முக்கியத்துவம் பெற்றது. இரு நாட்டு வணிக உறவு குறித்தும் ஆலோசனை நடத்தினர்.

சீனா உக்ரைனுடனான போரை முடிவுக்குக் கொண்டு வரத்தான் முயற்சி செய்கிறது. இவ்விவகாரத்தில் வரலாற்றின் சரியான பக்கத்தில் சீனா இருக்கிறது. ரஷ்யாவின் முக்கிய வர்த்தக நாடாக சீனா உள்ளது என்று சீன அதிபரின் பயணம் குறித்து ரஷ்ய அதிபர் புடின் பேசினார்.

இந்த நிலையில் ரஷ்ய பயணத்தின் முடிவில் சீனதிபர் ஜி ஜின்பிங், புடினிடம் கூறிய வார்த்தைகள் இணையத்தில் வைரலாகி வருகின்றன.

அந்த வீடியோவில் அதிபர் மாளிகை வாயிலில் நின்று கொண்டிருக்கும் ஜி ஜின்பிங் புதினின் கைகளைப் பிடித்து , 100 ஆண்டுகளில் இல்லாத மாற்றம் வரும். இந்த மாற்றத்தை நாம் இணைந்து செய்ய இருக்கிறோம் என்று கூறுகிறார்.

அதற்கு புதின் நான் இதனை ஏற்றுக் கொள்கிறேன். உங்களைப் பார்த்துக் கொள்ளுங்கள் நண்பரே. உங்கள் பயணம் பாதுகாப்பாக இருக்கட்டும் என்று பதிலளிக்கிறார்.

இதற்கிடையே ஜி ஜின்பிங் இதன் மூலம் அமெரிக்காவுக்கும், பிற உலக நாடுகளுக்கும் மறைமுகமான செய்தியை வழங்கி இருக்கிறார் என்று பல அரசியல் நிபுணர்கள் கருத்து தெரிவித்து வருகின்றனர்.

# வன்முறைக்கு பயந்து எதையும் விட்டுக்கொடுக்கமாட்டோம்

## பிரான்ஸ் அதிபர் மக்ரோன் தெரிவிப்பு



ஓய்வூதியச் சட்டம் ஜனநாயக செயல்முறைகளில் தொடர்ந்து முன்னோக்கிப் பயணிக்கும் என்று மீண்டும் உறுதியாகக் கூறியிருக்கிறார் பிரான்ஸ் அரசுத் தலைவர் மக்ரோன். வன்முறைக்கு நாங்கள் எதையும் விட்டுக் கொடுக்கமாட்டோம். வன்முறையை நான் தீவிரமாகக் கண்டிக்கிறேன் என்றும் அவர் தெரிவித்திருக்கிறார்.

பெல்ஜியம் தலைநகர் பிரஸல்ஸில் வெள்ளிக்கிழமை ஐரோப்பிய ஒன்றிய மாநாட்டில் கலந்துகொண்ட பின்னர் செய்தியாளர்கள் சந்திப்பில் பேசிய அவர், பிரான்ஸின் நிலவரம் தொடர்பான செய்தியாளர்களது கேள்விகளுக்குப் பதிலளித்தார்.

ஓய்வூதியச் சட்டம் தற்போது நாட்டின் அரசமைப்புச் சபையின் (Constitu-tional Council) பரிசீலனையில் உள்ளது. அதன் முடிவுக்காக நாங்கள் பொறுத்திருப்போம். அதன் பிறகு தொழிற்சங்கங்களுடன் பேச்சு நடத்தத் தயாராக இருக்கிறோம் - என்று மக்ரோன் தெரிவித்திருக்கிறார்.

இதேவேளை, அமைதியான முறையில் ஆர்ப்பாட்டம் நடத்துவோர் மீது அதிகப்படியான பலத்தைப் பயன்படுத்த வேண்டாம் என்று ஐரோப்பிய மனித உரிமைகள் சபை பாரிஸ் அரசிடம் கேட்டிருக்கிறது.

பிரான்ஸின் நிலைவரம் தொடர்பாக ஐரோப்பியக் கவுன்சிலின் (Council of Europe) மனித உரிமைகளுக்கான ஆணையாளர் விடுத்துள்ள ஓர் அறிக்கையில், ஆர்ப்பாட்டங்களின் இடையே ஆங்காங்கே இடம்பெறு கின்ற சிலரது வன்செயல்களுக்காக அமைதியான வழிமுறைகளில் அணிதிரள்கின்ற மக்களது ஒன்றுகூடும் சுதந்திரம் மீது அளவுக்கு அதிகமான பலம் பயன்படுத்தப்பட்டதை நியாயப்படுத்த முற்படவேண்டாம் - என்று கேட்டிருக்கிறார்.

# பாகிஸ்தானிலும் தேர்தல் நடத்த போதியளவு பணம் இல்லையாம்

பொருளாதார நெருக்கடி காரணமாக உடனடியாகப் பொதுத் தேர்தலை நடத்தப் பணம் இல்லை என்று பாதுகாப்புத்துறை அமைச்சர் கஜாவா ஆசிப் தெரிவித்தார்.

பாகிஸ்தான் பொருளாதார நெருக்கடியில் சிக்கி தவித்து வருகிறது. அந்நாட்டில் அத்தியாவசிய பொருட்களின் விலை அதிகரித்து வருகிறது. பெட்ரோல், டீசல், கோதுமை உள்ளிட்ட பொருட்களின் விலைகள் உயர்ந்தபடி இருக்கின்றன.

நெருக்கடியில் இருந்து மீண்டு வர பாகிஸ்தான் அரசு பல்வேறு நடவடிக்கையில் ஈடுபட்டு வருகிறது. அன்னிய செலாவணி இருப்பு குறைந்து வரும் நிலையில் சர்வதேச நாணய நிதியத்திடம் கடன் வாங்கும் முயற்சியில் ஈடுபட்டுள்ளது.

இதற்கிடையே பாகிஸ்தானில் தேர்தல் நடத்தவேண்டும் என்று முன்னாள் பிரதமர் இம்ரான் கான் வலியுறுத்தி வருகிறார். இதை வலியுறுத்தி அவரது கட்சி போராட்டங்களில் ஈடுபடுகிறது.

இந்த நிலையில் பாகிஸ்தானில் தேர்தல் நடத்த போதுமான பணம் இல்லை என்று அந்நாட்டு பாதுகாப்பு அமைச்சர் கஜாவா ஆசிப் தெரிவித்தார். இது தொடர்பாக அவர் தெரிவித்திருப்பதாவது:

பாகிஸ்தானில் தேர்தலை நடத்துவதற்கான போதுமான பணம், நிதியமைச்சகத் திடம் இல்லை. இதனால் தற்போது தேர்தல் நடத்துவது சாத்தியமில்லை.

இம்ரான் கான் கூறி வரும் கொலை முயற்சி குற்றச்சாட்டு பொய்யானது. அவர் மாகாண சபைகளை அரசமைப்பிற்கு முரணாக கலைத்து விட்டார். ஆனால் அவர் நம்பிக்கையில்லா வாக்கெடுப்பின் மூலம் அரசமைப்பு ரீதியாக பிரதமர் பதவியில் இருந்து வெளியேற்றப்பட்டார். தற்போது அவர் கோர்ட்டு முன் ஆஜராக விரும்பவில்லை.

இம்ரான் கான் தனது பதவி காலத்தில் பாகிஸ்தான் முஸ்லிம் லீக் (நவாஸ்) கட்சி தலைவர்களை சிறையில் அடைத்தார். அவர்கள் போலி வழக்குகளில் நீதிமன்ற விசாரணையை எதிர் கொண்டனர். தற்போது இம்ரான் கான் ஒவ்வொரு நாளும் நெருக்கடிகளை உருவாக்குகிறார். ஆனால் அவற்றை ஆட்சி சமாளித்து வருகிறது. இந்த நெருக்கடியில் இருந்து பாகிஸ்தான் விரைவில் வெளியே வரும்.

இவ்வாறு அவர் கூறினார்.

# கனேடிய தலைநரில் காந்தி சிலை சிதைப்பு

## காலிஸ்தான் ஆதரவாளர்கள் கைவரிசை



இந்தியாவில் சீக்கியர்கள் பெரும்பான்மையாக வாழும் பஞ்சாப் மாநிலத்தில் பிரிவினை கோரிப் போராடும் காலிஸ்தான் இயக்கத்தின் ஆதரவாளர்கள் கனடாவின் தலைநகர் ஒன்டாரியோவில் வைக்கப்பட்டிருந்த காந்தி சிலையை அடித்து உடைத்து சிதைத்துள்ளனர்.

இந்திய ஆட்சியாளர்களின் நடவடிக்கைகளைத் தொடர்ந்து காலிஸ்தான் இயக்கத் தலைவர் அம்ரித்பால் சிங் தலைமறைவாகினார். அதையடுத்து மேற்கு நாடுகளில் உள்ள அந்த இயக்கத்தின் ஆதரவாளர்களான சீக்கியர்கள் போராட்டங்களில் ஈடுபட்டு வருகின்றனர். அந்தந்த நாடுகளில் உள்ள இந்தியத் தூதரகங்களை அவ்வப்போது தாக்கியும் வருகின்றனர்.

அதபோலவே கனடாத் தலைநகரிலும் போராட்டம் நடத்தினர். அப்போது அங்கு வைக்கப்பட்டிருந்த வெண்கலத்தால் செய்யப்பட்ட 6 அடி உயர காந்தி சிலையின் முகம் போராட்டக்காரர்களால் சிதைக்கப்பட்டுள்ளது. மேலும் சிலையின் மீது பெயிண்டை ஊற்றியும் நாசம் செய்துள்ளனர். இந்திய அரசைக் கண்டித்தும் பிரதமர் மோடியை எதிர்த்தும் வாசகங்களை சிலையின் அடிப்பாகத்தில் எழுதியுள்ளனர். காந்தி கையில் உள்ள தடியில் காலிஸ்தான் கொடியை பறக்கவிட்டுள்ளனர்.

இது தொடர்பான வீடியோக்கள் சமூக வலைத்தளங்களில் வெளியாகி வைரலாகியுள்ளது. இந்த சிலையானது இந்திய அரசு, கனடா அரசுக்கு நன்கொடையாக வழங்கியதாகும். ஒன்டோரியோவில் உள்ள ஹாமில்டன் பொலிஸார் இது தொடர்பாக வழக்குப் பதிவு செய்து விசாரித்து வருகின்றனர்.

# ஏப்ரல் 1 முதல் டுவிட்டரில் புதிய நடைமுறை அறிமுகம்



ஏப்ரல் 1, 2023 முதல் கீச்சகத்தில் (டுவிட்டர்) கணக்குகளை சரிபார்க்கும் (வெரிஃபை) நடைமுறை நிறுத்தப்படுகிறது. டுவிட்டர் புளூ சந்தா நடைமுறைக்கு வரும் முன் தங்களின் கணக்குகளை வெரிஃபைடு செய்து புளூ டிக் பெற்றவர்களுக்கு ஏப்ரல் 1 ஆம் திகதி முதல் புளூ டிக் நீக்கப்படும் என டுவிட்டர் அறிவித்து இருக்கிறது.

சர்வதேச சந்தையில் சில நாடுகளில் படிப்படியாக கொண்டுவரப்பட்ட டுவிட்டர் புளூ சந்தா முறை தற்போது உலகளவில் வெளியாகிவிட்டது. புதிய அப்டேட்டின் மூலம் டுவிட்டர் ஏற்கனவே சரிபார்க்கப்பட்டு வழங்கப்பட்டு இருந்த வெரிஃபைடு செக் மார்க் நீக்கப்படுகிறது.

எலான் மஸ்க் டுவிட்டர் நிறுவனத்தை வாங்கிய பின் அறிமுகம் செய்-யப்பட்ட புதிய மாற்றங்களின் படி டுவிட்டர் புளூ சந்தா பயனர்களுக்கு ஏராளமான அம்சங்களை தனியாக வழங்குகிறது. இதில், வெரிஃபைடு செக்மார்க், டுவிட் உரையாடல்களுக்கு முன்னுரிமை, குறைந்த விளம்பரங்கள், புக்மார்க் ஃபோல்டர்கள், நேவிகேனை கஸ்டமைஸ் செய்யும் வசதி, டுவிட்களை எடிட் மற்றும் அண்டு செய்யும் வசதி இடம்பெற்று இருக்கிறது. இத்துடன் அதிகபட்சம் 4 ஆயிரம் எழுத்துக்களில் டுவிட் செய்யும் வசதி வழங்கப்படுகிறது. முன்னதாக டுவிட்டர் புளூ சந்தா உலகின் தேர்வு செய்யப்பட்ட 50 நாடுகளில் மட்டுமே வழங்கப்பட்டு இருந்தது.

தற்போது உலகம் முழுக்க டுவிட்டர் புளூ சந்தா பயன்பாட்டுக்கு வந்துள்ளது. உலகளவில் டுவிட்டர் புளூ வெளியாகி இருப்பதை அடுத்து டுவிட்டர் நிறுவனம் தனது பழைய வெரிஃபைடு திட்டத்தை நிறுத்துகிறது. பழைய வழக்கப்படி டுவிட்டர் பயனர்களின் ஐடி மற்றும் பொது மக்கள் இடையே பிரபலமாக இருப்போருக்கு குறிப்பிட்ட சில கட்டுப்பாடுகளின் கீழ் வெரிஃபைடு வழங்கப்பட்டு இருந்தது.

இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A , கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 25.03.2023 இல் வெளியிடப்பெற்றது.